# குறைந்த பட்ச கற்றலுக்கான பயிற்சிக் கட்டகம்

# வகுப்பு ___ 12

## பாடம் - வணிகவியல்

## 1. அமைப்பு

### பகுதி அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

**1. பின்வரும் சிறப்பியல்புகளில் எது தனி வணிகருக்கு ஏற்றதல்ல**
அ) தனிநபர் உரிமை ஆ) தனி மனித கட்டுப்பாடு
இ)எல்லா இலாபமும் வணிகருக்கே ஈ)நெகிழ்ச்சி தன்மையற்றது.

**2. தனி உரிமையாளரின் பயன்கள் என்ன?**
அ) சிறுமுதல் ஆ) அவசர முடிவு இ) வரையறு முதல் ஈ) மேலாண்மை

**3. கூட்டாண்மை உடன்படிக்கை என்பது?**
அ) வாயளவில் இருக்க வேண்டும். ஆ) எழுத்து வடிவில் இருக்க வேண்டும்
இ) முத்திரைத் தாளில் எழுத்தளவில் இருக்க வேண்டும் ஈ) எழுத்து வடிவிலோ அல்லது வாயளவிலோ இருக்கலாம்.

**4. கூட்டாண்மை ஏற்படுவது?**
அ) சட்டத்தின் படி
ஆ)வெளிப்படுத்திய உடன்படிக்கையின் படி
இ)வெளிப்படை அல்லது உட்கிடை உடன்படிக்கையின் படி
ஈ) வம்சா வழி சொத்துரிமையின் படி

**5.கூட்டுப் பங்கு நிறுமத்தின் மேலாண்மை ஒப்படைக்கப்பட்டிருப்பது**
அ) நிறும பதிவாளரிடம் ஆ) இயக்குனரவையிடம்
இ) பங்குதாரர்களிடம் ஈ) கடன் பத்திரதாரர்களிடம்

**6. பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ள அமைப்பு**
அ) தனி வணிகர் ஆ) கூட்டாண்மை
இ) கூட்டுப் பங்கு நிறுமம் ஈ) இந்து கூட்டுக் குடும்பம்

**7. கூட்டுறவு அமைப்பில்**
அ) ஒரு பங்குஒரு வாக்கு முறை கடைபிடிக்கப்பட்டுகிறது
ஆ) ஒரு நபர் ஒரு வாக்கு முறை கடைபிடிக்கப்பட்டுகிறது
இ) ஒரு நபருக்கு இரு வாக்குரிமைகள் உண்டு ஈ) பங்குகள் மாற்றியல்பு தன்மை கொண்டவை.

**8. கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்படுவது**
அ) கிராமப் புறங்களில் மட்டும் ஆ) கிராமப் புறங்களிலும், நகர்ப்புறங்களிலும்
இ) நகரங்களில் மட்டும் ஈ) மாநில தலைநகரங்களில் மட்டும்

**9. பாதுகாப்பு தொழிற்சாலைகளுக்கு ஏற்ற உகர்ந்த தொழில்முறை அமைப்பு**
அ) அரசு நிறுமம் ஆ) பொதுக் கூட்டுரு இ) துறைமுறை அமைப்பு ஈ) வாரிய அமைப்பு

**10. அரசு நிறுமத்தின் பங்கு முதலீடு .. . . . . . . க்கு குறையாமல் அரசு பெற்றிருக்க வேண்டும்.**

அ) 75% ஆ 60% இ) 95% ஈ) 51%

**11. ஒரு பன்னாட்டு நிறுமம் . . . . . என அழைக்கப்படுகிறது.**

அ) உலக அளவில் பெரியது ஆ) கூட்டாண்மை இ) கூட்டுறவு சங்கங்கள் ஈ) பொதுக் கூட்டுரு

**12. ஒரு குடும்பத்தில் பிறப்பின் மூலம் உறுப்புமை ஏற்படுவது**

அ) தனி வணிகம் ஆ) இந்துக் கூட்டுக் குடும்பம் இ) கூட்டுறவு சங்கம் ஈ) கூட்டாண்மை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. வேலைப்பகிர்வு முறை என்பது ......................
2. ஒப்படைவு என்பது ......................என்பதாகும்.
3. தனி வணிகரின் பொறுப்பு ......................
4. கூட்டாளிகள் இலாப நட்டங்களை ...................... பிரித்துக் கொள்வார்கள்.
5. இந்தியாவில் கூட்டாண்மை பதிவு என்பது ......................
6. கூட்டுறவு சங்கத்தில் எல்லா உறுப்பினர்களும் ......................
7. ஒரு நிறுமம் என்பது ...................... கருதப்படுகிறது.
8. தொலை தூர ஒலிபரப்பு ......................அமைப்பின் கீழ் வருகிறது.
9. பொதுக் கூட்டுருவை ......................எனக் கூறலாம்.
10. தமிழ்நாடு மின்சார வாரியம் . ...................... க்கு எடுத்துக்காட்டாகும்.
11. அரசாங்கத்தின் கொள்கைகள் ...................... சாதகமாக உள்ளது.
12. அரசு நிறுமத்தின் ஊழியர்கள் ...................... . அல்லர்.

**விடைகள்:**

**I.** 1. நெகிழ்ச்சித் தன்மையற்றது 2) வரையறு முதல் 3) முத்தரைத்தாளில் எழுத்தளவில் இருக்க வேண்டும் 4) வெளிப்படுத்திய உடன்படிக்கை 5) இயக்குநரவையிடம் 6) கூட்டுப்பங்கு நிறுமம் 7) ஒரு நபர் ஒரு வாக்கு முறை கடைபிடிக்கப்படுகிறது 8) கிராமப் புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் 9) துறை முறை அமைப்பு 10) 51% 11) உலக அளவில் பெரியது 12) இந்துக் கூட்டுக் குடும்பம

**II.** 1. துறைப்படுத்துதல் 2) ஒப்படைத்தல் 3) வரையறுக்கப்படாதது 4) ஒப்புக் கொண்ட விகிதப்படி 5) விருப்பத்திற்குட்பட்டது 6) சமம் 7) புனைவு நபர் 8) துறைமுறை அமைப்பு 9) சட்டமுறை நிறுமம் 10) வாரிய அமைப்பு 11) பன்னாட்டு நிறுமம் 12) அரசு ஊழியர்

## 2. தனியாள் வாணிகம்

### பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

**1. தனியாள் வணிகம் துவங்க**

அ) குறைந்தது இரு நபர்கள் தேவை ஆ) குறைந்தது ஏழு நபர்கள் தேவை இ) ஒரு நபர் மட்டுமே தேவை.

**2. தனியாள் வாணிகரின் பொறுப்பு**

அ) முதலுக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டுள்ளது. ஆ) சொத்துக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டுள்ளது இ) வரையறையில்லாதது.

**3. தனியாள் வணிக அமைப்பிற்கு ஏற்ற தொழில்கள்**

அ) பேரளவு வியாபாரம் ஆ) நடுத்தர வியாபாரம் இ) சிற்றளவு வியாபாரம்

**4. தனியாள் வணிகத்தில் முடிவெடுப்பது.**
அ) விரைவாக ஆ) தாமதமாக இ) இரண்டுமில்லை
**5. தனி ஆள் வணிகத்தில்**
அ) வியாபார இரகசியம் காக்க இயலாது ஆ) வியாபார இரகசியம் காக்க இயலும்
இ) இரண்டுமில்லை.
**விடைகள்:**

I. 1. ஒரு நபர் மட்டும் தேவை 2) வரையறையில்லாதது 3) சிற்றளவு வியாபாரம் 4) விரைவாக 5) வியாபார இரகசியம் காக்க இயலும்

## 3 - கூட்டாண்மை
### பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது**
அ) ஒப்பந்தத்தால் / வெளிப்படுத்திய உடன்படிக்கை ஆ) கூட்டாளிகளிடையே உறவு
இ) அரசின் வழிகாட்டல்.

**2. கூட்டாண்மையின் அடிப்படைக்கூறு**
அ) பூரண நல்ல நம்பிக்கை ஆ) முதலீட்டிற்கான தொகை இருத்தல்
இ) கூட்டுத் தொழில் செய்ய விருப்பம்
**3. கூட்டாண்மை நிறுவனம் பதிவு செய்தல்**
அ) 1949 சட்டம் ஆ) 1956 சட்டம் இ) 1932 சட்டம்

**4. கூட்டாண்மை பதிவு**
அ) கட்டாயம் ஆ) விருப்பத்தின் பேரில் இ) அவசியமில்லை

**5. கூட்டாண்மையில் தோன்றும் உறவு முறை**
அ) முதல்வர் மற்றும் முகவர் ஆ) உரிமையாளர் மற்றும் வேலையாளர் இ) எஜமானர் மற்றும் பணியாளர்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கூட்டாண்மை நிறுவனத்தில் இலாபநட்டம் ......................பகிர்ந்தளிக்கப்படுகிறது.
2. இந்தியாவில் கூட்டாளிகளின் பொறுப்பு ......................
3. வங்கித் தொழில் அல்லாத பிறதொழிலுக்கு அதிகபட்ச உறுப்பினர்கள் எண்ணிக்கை ......................
4. நிறுவனத்தில் பங்கேற்காத கூட்டாளியை ......................என்றழைக்கிறோம்.

**விடைகள்:**

I. 1. ஒப்பந்தத்தால்/வெளிப்படுத்திய உடண்படிக்கையின் படி: 2. பூரண நல்ல நம்பிக்கை: 3. 1932 சட்டம்: 4. விருப்பத்தின் பேரில்: 5. முதல்வர் மற்றும் முகவர

II. 1. ஒப்புக்கொண்ட விகிதம்: 2. வரையறாப் பொறுப்பு: 3. 20: 4. உறங்கும் கூட்டாளி

## 4 - நிறுமம் I

## பகுதி -அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஒரு கூட்டுப் பங்கு நிறுமத்தை பதிவு செய்தல்**
அ) கட்டாயமாக்கப்பட்டுள்ளது ஆ) நிறுமத்தின் விருப்பத்திற்குட்பட்டுள்ளது

இ) பொது வரையறை நிறுமத்தைப் பொறுத்தவரை கட்டாயம், தனி நிறுமத்தைப் பொறுத்தவரை அதன் விருப்பத்திற்குட்பட்டது. ஈ) பொது வரையறை நிறுமத்தின் விருப்பத்திற்கு உட்டபட்டதல்ல. தனி வயைறை நிறுமத்திற்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**2. பொது வரையறை நிறுமத்தில் குறைந்த அளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை**
அ) 2 ஆ) 3 இ) 7 ஈ) 10

**3. தனி வரையறை நிறுமத்தில் பங்குதாரரின் பொறுப்பு**
அ) பங்குகளின் செலுத்தப்பெற்ற மதிப்பளவாகும் ஆ) பங்குகள் மீது செலுத்தப்பெறாதிருக்கும் மதிப்பளவாகும் இ) தனிப்பட்ட சொத்துக்களின் அளவாகும் ஈ) பங்குகளின் மீது கோரப்பட்ட தொகையளவாகும்.

**4. தனி வரையறை நிறுமம் ஒன்று**
அ) தொழில் கூட்டுருவாக்கச் சான்றிதழ் பெற்றவுடன் ஆ) தொழில் தொடக்கச் சான்றிதழ் பெற்றவுடன்இ) பதிவாளரிடமிருந்து தான் தேர்ந்தெடுத்துள்ள நிறுமப் பெயருக்கு ஒப்புதல் கிடைத்தவுடன் ஈ) பதிவாளரிடம் நிறும் அமைப்புக்குரிய அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்த பின்னர் தொழில் தொடங்கலாம்.

**5. நிறுமம் ஒன்றின் வாழ்வுக்காலம் முடிவுக்கு வருவது எப்பொழுது எனில்**
அ) அதன் தோற்றுவிப்பாளர்கள் அனைவரும் இறந்தவுடன் ஆ) அதன் இயக்குநரவையில் உள்ள இயக்குநர்கள் அனைவரும் இறந்தவுடன் இ) முதலில் இருந்த மிகவும் அதிகமான உறுப்பினர்கள் தங்கள் பங்குகளை பிறருக்கு மாற்றிக் கொடுத்து விட்டால் ஈ) மேற்சொன்ன எச்சூழ்நிலையிலும் முடிவுக்கு வராது.

**6. நிறுமங்கள் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை A என்பது**
அ) நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி ஆ) இருப்புநிலைக்குறிப்பின் மாதிரி
இ) நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி ஈ) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி.

**7. ஒரு நிறுமத்தின் செயல்பாட்டு எல்லையை கீழ்கண்ட ஆவணங்களுள் எது உணர்த்துகிறது.**
அ) நிறுமத்தின் அமைப்பு முறையேடு ஆ) நிறுமச் செயல்விதிகள்
இ) தகவலறிக்கை ஈ) சட்டமுறை உறுதி விளம்பல்

**8. கீழ்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்டமன்றங்கள் இயற்றிய சட்டத்தின்மூலம் உருவாக்கப்படுகிறது.**
அ) பட்டய நிறுமம் ஆ) அயல்நாட்டு நிறுமம் இ) அரசு நிறுமம் ஈ) சட்டமுறை நிறுமம்

**9. கீழ்கண்ட நிறுமங்களுள் எது பதிவாளரிடம் தகவலறிக்கைக்கு மாற்றறிக்கை தாக்கல் செய்யவேண்டும்?**
அ) பங்கு வெளியீடு மூலம் பொதுமக்களிடமிருந்து பங்கு முதல் திரட்டும் ஒரு பொது வரையறை நிறுமம். ஆ) தன் இயக்குனர்கள் மற்றும் அன்னாரின் உறவினர்களிடமிருந்து முதல் தொகையைத் திரட்ட ஏற்பாடு செய்திருக்கும் ஒரு வரையறை நிறுமம் இ) ஒரு தனிவரையறை நிறுமம் ஈ) மேற்சொன்ன அனைத்து நிறுமங்களுமே.

**10. தகவலறிக்கையில் குறிப்பிட்டிருக்கும் குறைந்தளவு பங்கெடுப்பைக் கீழ்கண்ட நாட்களுக்குள்ஒரு பொது நிறுமம் பெற வேண்டும்.**
அ) 90 நாட்கள் ஆ) 120 நாட்கள் இ) 130 நாட்கள் ஈ) 60

நாட்கள்

**11. முன்னுரிமைப் பங்கு முன்னுரிமை பெற்றிருப்பது**
அ) பங்காதாயம் பெறுவதிலும் ஆ) நிறுமம் கலைப்பிற்குள்ளாகி முதல் தொகையை திருப்பித் தரும்பொழுது மட்டும் இ) வாக்குரிமையைச் செலுத்துவது ஈ) பங்காதாயம் பெறுவதிலும், நிறுமக் கலைப்பின் பொழுதும், பங்குமுதலை திரும்பப் பெறுவதிலும்

**12. பங்கு ஒறுப்பிழப்பு செய்யக் காரணம்**
அ) நிறுமத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த மறுத்தல் ஆ) தொடர்ந்து நிறுமத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளாமலிருப்பது
இ) அழைப்புப் பணத்தைச் செலுத்த தவறுவது
ஈ) ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் வன்முறைச் செயல்களில் ஈடுபடுவது.

**13. பங்குகளை தள்ளுபடியில் வெளியிட்டிருக்கும் போது பங்கொன்றின் முகமதிப்பு ரூ. 100 எனில்அனுமதிக்கப்படும் உயர்ந்தளவு வட்டம்.**
அ) ரூ. 5 ஆ) ரூ.10 இ) ரூ. 20 ஈ) ரூ. 15

**14. ஒரு நிறுமத்தின் கடனீட்டுப் பத்திரதாரர்கள் என்பார், அதன்**
அ) கடனாளர்கள் ஆ)உறுப்பினர்கள் இ) கடன் வாடிக்கையர் ஈ) நிறுமத்தில்

கடன்

**15. கீழ்க்கண்ட சூழிலைகளுள் எப்பொழுது கடனீட்டுப் பத்திரதாரர்கள் வட்டி பெறும் உரிமைபெற்றுள்ளனர்?**
அ) நிறுமம் இலாபம் ஈட்டும் பொழுது மட்டும் ஆ) பங்குதாரர்கள் பங்காதாயம் பெறும்பொழுது இ) நட்டம் ஏற்படும் ஆண்டு உட்பட எந்த ஆண்டிலும் ஈ) மேற்சொன்ன அனைத்து சூழ்நிலைகளிலும்

**<u>II. கோடிட்ட இடங்களை நிரப்புக.</u>**

1. ஒரு பொது வரையறை நிறுமத்தில் குறைந்தளவு இருக்க வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை ...........
2. பொறுப்புறுதியால் வரையறுக்கப்பட்ட நிறுமம் ஒன்றின் உறுப்பினருடைய பொறுப்பு ......................
3. தனி வரையறு நிறுமமொன்றில் குறைந்தளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை ......................
4. ஒரு நிறுமத்தில் செலுத்தப்பெற்ற பங்குமுதலில் 51 விழுக்காட்டிற்குக் குறையாமல், ஒரு மாநில அரசு வைத்திருக்குமானால் அது ......................நிறுமமாகும்.
5. தனக்கென்று தனியானதொரு செயல்முறை விதிகளை வகுத்துக் கொள்ளத் தேவையில்லாத நிறுமம் ......................நிறுமமாகும்.
6. ஒரு நிறுமத்தின் அக மேலாண்மை குறித்த விவரங்கள் அடங்கியிருப்பது ......................
7. ஒரு பொது வரையறு நிறுமம் தனது கடனீட்டுப் பத்திரங்களை வாங்குமாறு பொதுமக்களுக்கு அழைப்பு விடும் விளம்பரத்திற்குப் பெயர் ......................
8. நிலுவையில் உள்ள பங்காதாயம் பெற உரிமையுள்ள முன்னுரிமைப் பங்குகள் ......................என அழைக்கப்படுகிறன்றன.
9. வழக்கமாக பெறக்கூடிய நிலையான வீதப் பங்காதாயத்துடன், கூடுதல் பங்காதாயம் பெற உரிமையுள்ள பங்குகள் ......................பங்குகள் என அழைக்கப்படும்
10. தனி வரையறு நிறுமத்தில் குறைந்தது ......................இயக்குநர்களாவது இருக்க வேண்டும்.
11. தகுதிப் பங்குகளின் மொத்த இயல்பு ...................... ரூபாய்க்கு மிகக் கூடாது.

12. ரூ.6,000 இயல்மதிப்புடைய பங்குகளை வெளியிட்டிருக்கும் நிறுமத்தில் ஒரு இயக்குநர் வைத்திருக்க வேண்டிய தகுதிப் பங்குகளின் எண்ணிக்கை .....................

**விடைகள்**

I.1. கட்டாயமாக்கப்பட்டுள்ளது: 2. 7: 3. பங்குகள் மீது செலுத்தப் பெறாதிருக்கும் மதிப்பளவாகும்:4. தொழில் கூட்டுருவாக்கச் சான்றிதழ் பெற்றவுடன் தொழில் தொடங்கலாம்: 5. மேற்சொன்ன எச்சூழ்நிலையிலும் முடிவுக்கு வராது: 6. நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி: 7. நிறுமத்தின் அமைப்பு முறையேடு: 8. சட்டமுறை நிறுமம்: 9. தன் இயக்குநர்கள் மற்றும் அன்னாரின் உறவின்களிடமிருந்து முதல் தொகையைத் திரட்ட ஏற்பாடு செய்திருக்கும் ஒரு பொது வரையறை நிறுமம்: 10. 90 நாட்கள்: 11. பங்காதாயம் பெறுவதிலும் நிறுமம் கலைப்பின் பொழுது பங்கு முதலைத் திரும்பப் பெறுவதிலும்: 12. அழைப்புப் பணத்தை செலுத்தத் தவறுவது: 13. ரூ. 10: 14. கடனாளர்கள்: 15. நட்டம் ஏற்படும் ஆண்டு உட்பட எந்த ஆண்டிலும்:

II.1. ஏழு: 2. வரையறுக்கப்பட்டது: 3. இரண்டு: 4. அரசு: 5. பொது: 6. செயல்முறை விதிகள்: 7. தகவலறிக்கை: 8.குவி முன்னுரிமைப் பங்குகள்: 9. எஞ்சிய இலாபத்தில் பங்கு பெறும் முன்னுரிமை: 10. இரண்டு: 11. ஐந்தாயிரம்: 12. ஒன்று:

## 5. நிறுமம் - 2

### பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஒரு நிறுமத்தின் முதலாவது இயக்குநர்கள்**

அ) சட்டமுறைக் கூட்டத்தில் உறுப்பினர்களால் ஆ) முதலாவது பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்களால் இ) நிறுமச் செயல்முறை விதிகளின் பெயர்கள் குறிப்பிடப்படுவதால் ஈ) நியமப் பதிவாளரால் நியமிக்கப்படுகிறார்.

**2. ஒரு இயக்குநர்**

அ) நிறுமத்தின் முகவராக ஆ) நிறுமத்தினை பெரும்பாண்மையர் அல்லது நம்புறுதியாண்மையராக இ) நிறுமத்தின் முதன்மை நிர்வாக அதிகாரியாக ஈ) மேற்சொன்ன அனைத்துமாக செயலாற்றுகிறார்.

**3 . . . . . . . எண்ணிக்கைக்கு மிகாத பொது வரையறு நிறுமங்களில் ஒரே நேரத்தில் ஒரு நபர்** இயக்குநர் பதவி வகிக்கலாம்

அ) 10 ஆ) 15 இ) 20 ஈ) வரம்பில்லை

**4. ஒரு பொதுவரையறு நிறுமத்தில் இயக்கநர் ஒருவர் வைத்திருக்க வேண்டிய தகுதிப்பங்குகளின்** மதிப்பு

அ) ரூ. 5000க்கு ஆ) ரூ. 5,00,000க்கு இ) ரூ. 50,000க்கு ஈ) 500 க்கு

**5. பொது வரையறு நிறுமத்தில் ஒட்டு மொத்த மேலாண்மை ஊதியம்**

அ) நிகர இலாபத்தில 11 % ஆ) செலுத்தப்பெற்ற முதல் மற்றும் பொதுக்காப்பிருப்புத் தொகையில் 11 % இ) நிகர இலாபத்தில் 5% விழுக்காட்டை ஈ) செலுத்தப் பெற்ற முதல் மற்றும் பொதுக்காப்பிருப்புத் தொகையில் 5%

**6. நிறுமச் செயலர் ஒருவர்**

அ) அரசால் ஆ) இந்திய நிறுமச் செயலர்கள் அமைப்பால்
இ) இயக்குநரவையால் ஈ) ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பங்குநர்களால் நியமிக்கப்படுகிறார்கள்.

**7. தகுதி பெற்ற நிறுமச் செயலரை நியமித்தல் கீழ்கண்டவற்றில் எந்நிறுமத்திற்கு** கட்டாயமாக்கப்பட்டுள்ளது?

செலுத்ததப்பட்ட பங்கு முதல்

அ) ரூ. 5,00,000க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம்
ஆ) ரூ.50,00,000க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம்
இ) ரூ. 25,00,000 க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம்
ஈ) ரூ.15,00,000க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம்

**8. கீழ்கண்ட நிறுமங்களுள் எது சட்டமுறை கூட்டத்தை கூட்டவேண்டும்**
அ) சட்டமுறை நிறுமம் ஆ) தனிவரையறை நிறுமம்
இ) பொதுவரையறை நிறுமம் ஈ) பட்டை சாசன நிறுமம்

**9. இரு பொது ஆண்டுக் கூட்டங்களுக்கு இடையே உள்ள இடைவெளி**
அ) 15 மாதங்களுக்கு மேல் செல்லக் கூடாது ஆ) 12 மாதங்களுக்கு மேல் செல்லக்கூடாது
இ) 18 மாதங்களுக்கு மேல் செல்லக்கூடாது ஈ) 20 மாதங்களுக்கு மேல் செல்லக்கூடாது.

**10. ஆண்டுப் பொதுக்கூட்டத்தை கீழ்கண்டவற்றுள் எந்த நடவடிக்கை வழக்கமாக மேற்கொள்ளபடமாட்டாது.**
அ) தணிக்கையர் நியமனம் ஆ) கடனீட்டுப் பத்திர வெளியீடு
இ) பதவி விலகும் இடத்திற்கு இயக்குநரை நியமித்தல் ஈ) பங்காதாயம் விளம்பல்

**11. சிறப்புப் பொதுக் கூட்டத்தை யார் கூட்டலாம்?**
அ) நிறுமச் சட்ட தீர்ப்பாயம் ஆ) இயக்குநர் அவை தானே முன்வந்து அல்லது உறுப்பினர்கள் வேண்டுகோளை ஏற்று இ) இயக்குநரவை கூட்டத் தவறும்பொழுது வேண்டுகோள் விடுத்தோரோலாயேஈ) மேற்சொன்ன அனைவராலும்

II. **கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. இயக்குநர்கள் நிறுமத்தின் .............. வும் பொறுப்புறுதியாண்மையராகவும், அதிகாரிகளாவும் செயல்படுகின்றனர்
2. பங்குநர்கள் நிறுமத்தின் உண்மையான ...........................
3. நிறுமத்தின் முதலாவது இயக்குநர்கள் வழக்கமாக ................... ல் பெயரிடப்பட்டிருப்பர்.
4. பொதுவரையறு நிறுமம் தொழில் தொடங்க உரிமை பெற்ற நாளிலிருந்து சட்டமுறைக் கூட்டத்தை ...............க்குள் ................க்கு மேல் கூட்டப்பட வேண்டும்.
5. சட்டமுறை அறிக்கையை நிறும உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் கூட்டம் நடைபெறும் நாளுக்கு .......................நாட்களுக்குள் முன்னராகவே அனுப்பியிருக்க வேண்டும்
6. இரு ஆண்டுப் பொதுக் கூட்டங்களுக்கு உள்ள கால இடைவெளி .................மாதங்களுக்கு மிகக் கூடாது
7. செயல் முறை விதிகளில் மாற்றம் செய்ய ........................ தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.
8. பங்குநர் ஒருவருக்குப் பதிலாக கூட்டத்தில் கலந்துகொள்ள நியமிக்கப்படும் நபர் ......................... என அழைக்கப்படுகின்றனர்.
9. ஒரு பொது வரையறு நிறுமப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய உறுப்பினர் குறைவெண் ....................... ஆகும்.
10. ஒரு கூட்டம் செலுத்தத்தக்கதாக இருக்க வருகை தரவேண்டிய குறைந்தளவு உறுப்பினர் எண்ணிக்கை ......................... எனப்படும்
11. பொதுவாக தணிக்கையர் .................. கூட்டத்தில் நியமிக்கப்பட்டு ஊதியமும் நிர்ணயிக்கப்படும்.
12. ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவிக்கையை அனைத்து உறுப்பினருக்கும் கூட்ட நாளுக்கு குறைந்தது ................ நாட்களுக்கு முன்னராவது தர வேண்டும்.

**விடைகள்:**

I. 1.நிறுமச் செயல்முறை விதிகளில் பெயர் குறிப்பிடப்படுவதால் 2. மேற்சொன்ன அனைத்துமாக செயலாற்றுகிறார் 3. 15 4. ரூ. 5,000க்கு 5. நிகர இலாபத்தில் 11 % 6. இயக்குநர் அவையால் 7. ரூ. 50,00,000க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம் 8. பொது வரையறு நிறுமம் 9. 15 மாதங்களுக்கு மேல் செல்லக் கூடாது 10. கடனீட்டுப் பத்திர வெளியீடு 11. மேற்சொன்ன அனைவராலும்

II. 1.முகவர்களாகவும் 2. உரிமையாளர்கள் 3. செயல்முறை விதிகள் 4. 6 மாதங்கள், 1 மாதம் 5. 21, 6. 15 7. சிறப்புத் தீர்மானம் 8. பகராள் 9. 5 10. குறைவெண் 11. ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் 12. 21

# 6. பங்கு மாற்றகம்

## பகுதி - அ

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1.இது புதிய நிறுமங்களின் முதல் விடுப்புகளை வெளியிடும்**
அ) முதன்மைச் சந்தை ஆ) இரண்டாம் நிலைச் சந்தை
இ) பொருட்கள் சந்தை ஈ) ஒழுங்கு முறை விற்பனைச் சந்தை

**2. புதிய பங்குகளை விற்க வழக்கமாக பயன்படுத்தும் முறை**
அ) பொது விடுப்புகள் ஆ) விற்பனைக்கான தருமொழி இ) மேலாண்மைத் தரகர்கள் ஈ) ஒப்புறுதியளித்தல்

**3. பங்கு மாற்றகம் இதில் ஈடுபட்டிருக்கிறது**
அ) சரக்கு ஆ) சேவை இ) நிதிப் பத்திரங்கள் ஈ) நாட்டின் பணம்

**4. இந்தியாவில் உள்ள ஏற்பிசைவு பெற்ற பங்கு மாற்றங்களின் எண்ணிக்கை**
அ) 20 ஆ) 21 இ) 22 ஈ) 24

**5. பங்கு மாற்றங்கள் இவற்றின் வணிகத்தை அனுமதிக்கிறது**
அ) நிறுமத்தின் எல்லாப் பங்குகளையும் ஆ) அரசால் வெளியிடப்படுகின்ற பிணையங்கள்
இ) பட்டியலிடப்பட்ட பத்திரங்கள் ஈ) பட்டியலிடப்படாத பத்திரங்கள்

**6. தன் வணிகர்கள் பங்கு மாற்றங்களில் இவர்களுக்கான வணிகத்தில் ஈடுபடுகின்றனர்**
அ) வாடிக்கையாளர்களுக்காக ஆ) தங்களுடைய சொந்த நடவடிக்கைகளுக்காக
இ) மற்ற தரகர்களுக்காக ஈ) மற்ற உறுப்பினர்களுக்காக

**7. எதிலும் கெட்டதையே காண்கின்ற மனப்பாங்கு கொண்டவர்**
அ) கலைமான் ஆ) கரடி இ) காளை ஈ) முடவாத்து

**8.எல்லாம் நன்மைக்காகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்டவர்**
அ) காளை ஆ) கரடி இ) கலைமான் ஈ) முடவாத்து

**9. பத்திரங்கள் ஒப்பந்த சட்டம் இவ்வாண்டு நிறைவேற்றப்பட்டது**
அ) 1952 ஆ) 1957 இ) 1964 ஈ) 1956

**10. செபி இச்சட்டப்படி உருவாக்கப்பட்டது**
அ) பத்திரங்கள் ஒப்பந்தச் சட்டம் ஆ) இந்திய பத்திர மற்றும் மாற்றங்கள் வாரியச் சட்டம்
இ) நிறுமங்கள் சட்டம் ஈ) இந்திய அரசியல் சாசனம்

**11. ஒரு காளை ஊக வணிகர் இதை நம்புகிறார்**
அ) விலைகள் உயருதல் ஆ) விலைகள் குறையும்
இ) நிலையான விலைகள் ஈ) விலையில் மாற்றம் ஏதும் இருக்காது.

**12. பங்கு மாற்றகம் பங்குகளின் ஊக வணிகத்தை**
அ) அனுமத்திப்பதில்லை ஆ) ஊக்கப்படுத்துவதில்லை
இ) ஊக்கப்படுத்துகிறது ஈ) தடைசெய்யும்

**13. எச்சரிக்கையான ஊக வணிகர் . . . . . . எனப்படுவார்.**
அ) கலைமான் ஆ) காளை இ) முடவாத்து ஈ) கரடி

**14. பங்குமாற்றகம் இதற்கான ஓர் இடமாகும்**
அ) ஒரு பத்திரத்தை மற்றொரு பத்திரமாக மாற்றுவது ஆ) நிதிப் பத்திரங்களை வாங்கி விற்பது
இ) புதுப் பங்குகளை வெளியிடுதல் ஈ) சரக்குகளை வாங்கி விற்றல்

**15. சபைத் தலைவருடன் சேர்ந்து செபியில் இவ்வளவு உறுப்பினர்கள் உள்ளனர்**
அ) 5 ஆ) 7 இ) 6 ஈ) 8

**II கோடிட்ட இடத்தை நிரப்புக**

1. பேரளவு நிறுவனங்கள்..................அமைப்பில் நிறுவப்படுகின்றன.
2. கூட்டுப் பங்கு நிறுமங்களுக்கு ..................தேவை
3. நிறுமத்திற்கு தேவையான நீண்ட கால முதல் சிறு அலகுகளாகப் பிரிக்கப்பட்டு ....... எனப்படும்.
4. பங்குகள் .................... உரிமையைக் குறிக்கும்
5. கடன் பத்திரங்கள் ..................உரிமையைக் குறிக்கும்
6. .................... கடன் பெற்றுக் கொண்டதற்கான ஒரு வாக்குறுதிப் பத்திரம்.
7. முதன்மைச் சந்தையின் .................... பங்குகளின் வணிகம் நடைபெறுகிறது.
8. இரண்டாம் நிலைச் சந்தை, முதன்மைச் சந்தையின் விற்கப்பட் .................. களின் வணிகத்தில் ஈடுபட்டுள்ளது.
9. ..................போன்றவர்கள் புதிய விடுப்புகளை வெளியிட நிறுமங்களுக்கு உதவுவார்கள்.
10. புதிய பங்குகளை வெளியிடுவதற்கு பெரும்பாலானோர் மேற்கொள்ளும் முறை ............ ஆகும்.
11. .................... புதிய பங்குகளை வெளியிட இடைத்தரகர்களாக செயல்படுகின்றனர்.
12. ..................என்பது பங்குகளை வாங்க பொது மக்களுக்கு விடுக்கும் ஒரு அழைப்பாகும்.
13. பங்குகள் ஒதுக்கீடு செய்த பின், ஒதுக்கீட்டாளர் நிறுமத்தின் .................. ஆகிறார்.
14. விண்ணப்பத் தொகை ஒரு பங்கின் மதிப்புத் தொகையில் ........சதவிகிதத்திற்கு குறைவாக இருத்தல் கூடாது.
15. குறும்பங்கொப்பம் வெளியிடப்படும் பங்கு முதலில் .......... சதவிகிதமாக நிர்ணயிக்கப்படுகிறது.
16. இரண்டாம் நிலைச் சந்தையின் வாணிப அளவு .................. பொறுத்து இருக்கும்.
17. பழைய இரண்டாம் நிலைப் பத்திரங்கள.................. வாணிகம் செய்யப்படுகிறது.
18. இந்தியாவில் .................. பிராந்தியம் பங்கு மாற்றங்கள் உள்ளன.
19. பங்கு மாற்றகத்தின் அலுவல் பட்டியலில் பங்குகளின் பெயரை இடம் பெறச் செய்வது ...... எனப்படும்
20. பொதுத்துறை நிறுவனங்களுக்கு பட்டியலிடுதல் .................. ஆக்கப்பட்டிருக்கிறது.
21. தீர்வுப் பத்திரங்கள் .................. எனவும் அழைக்கப்படுகிறது.
22. .................... ஆணை குறிப்பிட்ட பத்திரத்தை எந்த விலைக்கும் வாங்கவும் அல்லது விற்கவும் முழுச் சுதந்திரம் அளிக்கிறது.
23. ஆயத்தக் கொடுப்பு ஒப்பந்தங்கள் .................. எனவும் அழைக்கப்படுகிறது.
24. முதலீட்டாளர்கள் பத்திரங்களை .................. காலத்திற்கு தம்மிடம் வைத்துக் கொள்வர்.
25. .................... என்பவர் பங்குச் சந்தை உறுப்பினரால் அமர்த்தப்பட்ட பணியாள் ஆவார்.
26. கலைமான் ஊக வணிகர் .................... எனவும் அழைக்கப்படுவார்.
27. .................... சந்தை புதிய வெளியீட்டிற்கான சந்தையைக் குறிக்கும்.
28. பத்திரங்களின் மறு விற்பனை .................. எனப்படும்.
29. செபியின் சபைத்தலைவரும் மற்றும் வாரியத்தின் ஐந்து உறுப்பினர்களும் .................. ஆல் நியமிக்கப்படுகின்றனர்.
30. ........... இந்திய பங்குச் சந்தையை ஒழுங்குபடுத்த ஏற்படுத்தப்பட்ட மேற்பாவை அமைப்பாகும்.

**விடைகள்:**

1) முதன்மைச் சந்தை 2) பொது விடுப்புகள் 3) நிதிப் பத்திரங்கள் 4) 21 5) பட்டியிலிடப்பட்ட பத்திரங்கள் 6)தங்களுடைய சொந்த நடவடிக்கைகளுக்காக 7) கரடி 8) காளை 9) 1956 10) இந்தியப் பத்திர மற்றும் மாற்றங்கள் வாரியச் சட்டம் 11) விலைகள் உயருதல் 12) ஊக்கப்படுத்துகிறது 13) கலைமான் 14) நிதிப்பத்திரங்களை வாங்கி விற்பது 15) 6

**II**

1) கூட்டுப் பங்கு நிறுமம் 2) பேரளவு முதல் 3) பங்குகள் 4) உடமை 5) கடனீட்டு 6) கடன்பத்திரம் 7) புதிய 8) பத்திரங்களின் மறு விற்பனை 9) தரகர்கள், ஒப்புறுதியர் 10) பொது விடுப்பு 11) வெளியீட்டகங்கள் 12) தகவலறிக்கை 13) பங்குதாரர், உறுப்பினர் 14) 5 15) 90 விழுக்காடு 16) முதன்மைச் சந்தை 17) இரண்டாம் நிலைச் சந்தை 18) 21 19) பட்டியலிடுதல் 20) கட்டாயம் 21) முன்னோக்கிய பட்டியல் பத்திரங்கள் 22) தன் விருப்புரிமை / உசித ஆணை 23) அவ்விடத்திய ஒப்பந்தம் 24) நீண்ட 25) அதிகாரமளிக்கப்பட்ட எழுத்தர்கள் 26) முனைம வேட்டையாளர் 27) முதன்மைச் சந்தை 28) இரண்டாம் நிலைச் சந்தை 29) மத்திய அரசால்30) செபி

# 7. கூட்டுறவு சங்கம்

## பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்படுவது**

அ) கிராமங்களில் மட்டும் ஆ) கிராமங்களிலும் நகரங்களிலும்
இ) பெருநகரங்களிலும் மட்டும் ஈ) நகர்ப்புறங்களில் மட்டும்

**2.கூட்டுறவில் குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை**

அ) 2 ஆ) 7 இ) 10 ஈ) 25

**3. பங்காதாயம் கூட்டுறவில் . . . . . . . அடிப்படையில் உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.**

அ) பங்குமுதல் ஆ) பங்குகள் வாங்கிய எண்ணிக்கையில்
இ) ஆதரவின் அடிப்படையில் ஈ) இவை ஏதும் இல்லை

**4. கூட்டுறவுச் சங்கத்தின் அடிப்படை நோக்கமானது**

அ) இலாபம் ஈட்டுவது ஆ) உறுப்பினர்களின் நன்மைக்கே இன்றியமையாத சேவையை நிர்வாகம் செய்வுத இ) சமுதாயத்திற்கு இன்றியமையாத சேவையை செய்தல் ஈ) சமுதாயத்திற்கு போதுமான தரமான பொருட்களைத் தருவது.

**5. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களின் பங்கு**

அ) மாற்ற முடியும் ஆ) திருப்பிச் செலுத்தக் கூடியது
இ) மாற்ற முடியாது ஈ) இவற்றில் ஏதுமில்லை

**6. கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களின் உச்ச அளவு**

அ) 5 ஆ) 60 இ) 100 ஈ) வரையறையில்லை

**7. ஒரு கூட்டுறவுச் சிறப்பங்காடி அளிப்பது**

அ) கடன் ஆ) சேவை இ) சரக்குகள் ஈ) ரொக்கம்

**8. முதன் முதலில் நுகர்வோர் கூட்டுறவு வெற்றிகரமாக விளங்கிய நாடு**

அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா இ) சுவிஸ் ஈ) இந்தியா

**9. சிறுபாண்மையினர் நலத்தை பாதுகாக்கும் தொழில் அமைப்பு**
அ) தனி வணிகம் ஆ) கூட்டாண்மை இ) கூட்டுறவுச் சங்கங்கள் ஈ) பொதுநிறுமம்

**10. மத்திய கூட்டுறவு வங்கி தொடங்கப்படுவது**
அ) கிராமங்களில் ஆ) மாவட்ட தலைநகரங்களில்
இ) மாநிலத் தலைநகரங்களில் ஈ) நகர்ப்புறங்களில்

**II கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. கோப்பரெரி என்ற இலத்தீன் மொழியின் பொருள் ...................
2. கூட்டுறவு இயக்கத்தின் தந்தை ...................
3. ................... விழுக்காடு மட்டுமே பங்காதாயமாக பகிர்ந்தளிக்கப்படுகிறது.
4. கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் பொறுப்பு ...................
5. பங்கு மாற்றகம் அனுமதிக்கப்படும் அமைப்பு .......... , பங்கு மாற்றகம் தடைவிதிக்கப்பட்ட அமைப்பு ............
6. கூட்டுறவுச் சங்கத்தின் மேலாண்மை ................... கொண்டது.
7. உறுப்பினர் சேவை என்பது இதன் முக்கிய குறிக்கோள்...................
8. வேளாண்மை கடன் சங்கம் (அ) ஊரக நாணயச் சங்கம் .................. என பிரிக்கப்படும்.
9. உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தை அமைப்பது ...................
10. சிறப்பங்காடிகள் எனப்படுவது பேரளவில் செயல்படும் .................. அமைப்பு.

**விடைகள்:**

I1.கிராமங்களிலும் நகரங்களிலும்: 2) 25: 3) ஆதரவின் அடிப்படையில்: 4) உறுப்பினர்களின் நன்மைக்காக இன்றியமையாத சேவையை நிர்வாகம் செய்வது: 5) திருப்பி செலுத்தக் கூடியது. 6) வரையறையில்லை: 7) சரக்குகள்: 8) இங்கிலாந்து: 9) கூட்டுறவுச் சங்கங்கள்: 10) மாவட்ட தலைநகரங்களில்:

II1. இணைந்து பணியாற்றுதல்: 2) இராபரட் ஓவன்: 3) 9%முதல் 14% வரை 4) வரையறுக்கப்பட்டது: 5) கூட்டுப் பங்கு நிறுமம், கூட்டுறவுச் சங்கங்கள்: 6) மக்களாட்சித் தன்மை 7) கூட்டுறவுச் சங்கங்கள்: 8) பிரதம நாணயச் சங்கங்கள்: 9) சிறு தொழில் உற்பத்தியாளர்கள்: 10) சில்லறை வணிகம்

# 8. தொழில் துறையில் அரசு

## பகுதி - அ

**1. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

**1. அரசு நிறுமம் இவற்றின் கீழ்ப் பதிவு செய்யப்படுகிறது.**
அ) மைய அல்லது மாநில அரசின் தனிச்சட்டம் ஆ) இந்திய நிறுமச் சட்டம்,1956
இ) அரசாணை ஈ) அரசியல் அமைப்பு சாசனம்

**2. பொதுக் கழகத்தின் நிருவாகம் இதைப் பெற்றிருக்கிறது.**
அ) வரையறுக்கப்பட்ட சுதந்திரம் ஆ) செயல்பாட்டு சுதந்திரமின்மை
இ) கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரம் ஈ) வரையறுக்கப்படாத செயல்

சுதந்திரம்.

**3. அரசுத் தொழில்கள் மிகச் செம்மையாக இயங்குவதற்கு மிகவும் உகந்தது எனப் பொதுவாகக்கருதப்படும் வடிவமைப்பு**
அ) துறைவாரி அமைப்பாகும் ஆ) பொதுக் கழமாகும் இ) அரசு நிறுமமாகும் ஈ) கூட்டுப்பங்கு நிறுமமாகும்.

**4. பொது மக்களும் இந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கலாம்.**
அ) துறைவாரி அமைப்பு ஆ) பொதுக்கழகம்
இ) அரசு நிறுமம் ஈ) மேற்கூறிய நிறுவனங்கள் ஏதுமில்லை.
**5. அரசு நிறுமத்தில் அரசு கொண்டிருக்க வேண்டிய குறைந்தபட்ச பங்கு முதல்**
அ) 51 விழுக்காடு ஆ) 60 விழுக்காடு இ) 75 விழுக்காடு ஈ) 90 விழுக்காடு.

**II கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. பொது நிறுவனம் என்பது ......................க்கு சொந்தமானதாகவும் அதன் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டும் இயங்கும் தொழிலமைப்பாகும்.
2. அரசுத் தொழில்களின் முதன்மையான நோக்கம்......................
3. பொதுக் கழகங்கள் மத்திய அரசு மாநில அரசின் ......................உருவாக்கப்படுகின்றன.
4. அரசு நிறுமத்தில் குறைந்தபட்சம்...................... பங்குகளை அரசு எடுத்து வைத்திருக்கும்.
5. அரசுத் தொழில் வடிவமைப்புகளில் மிகவும் தொண்மையானது......................
6. ஏற்கனவே தனியார் துறையில் இயங்கி வரும் தொழில்களை அரசு ஏற்று நடத்தினால் அதனை ........... எனலாம்.
7. இராணுவப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்ற தொழிலமைப்பு .......அமைப்பேயாகும்.
8. ..................ஒரு சிலரிடம் பொருளாதார வலிமை செறிவதை தடை செய்கிறது.
9. ...........துறையில் நுகர்வோரும், பணியாளர்களும் சுரண்டப்படுவது பரவலாகக் காணப்படுகிறது.
10. பொதுக் கழகத்தை அரசால் நியமிக்கப்பட்ட...................... நிர்வாகம் செய்கிறது.

**விடைகள்:**

1. 1.இந்திய நிறுமச் சட்டம்.1956 2.வரையறுக்கபடபடாத செயல் சுதந்திரம்:3. பொதுக் கழகமாகும்: 4) அரசு நிறுமம்: 5) 51 விழுக்காடு:
2. 1) அரசுக்கு: 2) பொது சேவை (அ) பொது நலன்: 3) தனிச்சட்டத்தால்: 4) 51% 5) துறைவாரி அமைப்பு 6) நாட்டுடமையாக்கம் 7) துறைவாரி அமைப்பு 8) பொதுத்துறை 9) தனியார் 10) இயக்குநரவை்

**நான்கு மதிப்பெண் வினாக்கள்**

**1. அமைப்பை வரையறு?**

**லூாயிஸ்.எச்.ஹேனே** இலக்கணப் படி "அமைப்பு என்பது பொதுவான நோக்கம் அல்லது நோக்கங்களை வெற்றியடையச் செய்வதற்காக, இணக்கமான சிறப்பு வாய்ந்த பகுதியினைச் சரிகட்டக் கூடியதொன்றாகும்."

**2. தரவரிசை முறைக் கோட்பாடு என்றால் என்ன?**

- ஆணையுரிமையின் வரிசை உயர்மட்டத்திலுள்ள உயர் அலுவலரிடமிருந்து கீழ்மட்டத்திலுள்ள தொழிலாளர்கள் வரை படிப்படியாக கீழ்நோக்கி வரவேண்டும்.
- இதற்கு "கட்டளை இணைப்பு" என்று பெயர்.
- ஓர் உயர் அலுவலர் தனக்கு கீழ் பணியாற்றும் பணியாளருக்கு ஆணையுரிமையை வழங்குகிறார்.

**3. ஒருங்கிணைத்தலின் பொருள் என்ன?**

- ஒரு அமைப்பின் விரும்பத்தக்க இலக்கினை அடைய, அதன் அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்க வேண்டும்.
- ஒரு பண்டகசாலை இலாபம் பெறவேண்டுமெனில் அதன் கொள்முதல் துறையும் விற்பனைத் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.
- ஒரு துறைவாரி பண்டகசாலையில் உள்ள ஒவ்வொரு துறையும் மற்ற துறையுடன் கலந்தாராய்ந்து முடிவு எடுக்க வேண்டும்.

**4.பொதுக்கூட்டுரு என்றால் என்ன?**

**பாராளுமன்றம் (அ) சட்டமன்றத்தில்** இயற்றிய **தனிச் சட்டத்தால்** உண்டாக்கப்படும் ஒரு அமைப்பு பொதுக்கூட்டுரு ஆகும். இது ஒரு சட்டமுறைக் கழகமாகும். ஏனெனில் இது தனிச்சட்டத்தால் உருவாக்கப்படுகிறது.

எ.கா:

- இந்திய ரிசர்வ் வங்கி
- U.T.I (Unit Trust of India)
- இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம்,
- அரசு வணிகக் கழகம்

**5. வாரிய அமைப்பின் பொருள் பற்றி கூறுக?**

அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட பொதுத்துறை அமைப்பில் ஒன்றே வாரிய அமைப்பாகும். இந்த அமைப்பின் மேலாண்மை அரசால் நியமிக்கப்பட்ட குழுவிடம் உள்ளது. இவ்வமைப்பு தனி சட்டத்தால் ஒழுங்கு படுத்தப்படுகிறது.

எ.கா:

- தமிழ்நாடு மின்சார வாரியம்,
- தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
- தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்

**6. பன்னாட்டு நிறுமத்தின் எ.கா தருக?**

| | |
|---|---|
| பிலிப்ஸ் | டச்சு |
| யூனி லீவர் லிமிடெட் | பிரிட்டிஷ் |
| யூனியன் கார்பைடு | அமெரிக்கா |
| இன்டர் நேஷனல் பிசினெஸ் மெஷின் (IBM) | அமெரிக்கா |
| கோ கோ கோலா கழகம் | அமெரிக்கா |

**7. கூட்டுருவாக்கம் பெறாத அமைப்புகளின் வகைகளைக் கூறுக?**

**கூட்டுருவாக்கம் பெறாத அமைப்புகளின் வகைகள்:**

1) தனியாள் வணிகம்
2) கூட்டாண்மை
3) இந்துக் கூட்டுக் குடும்ப வாணிகம்

**8. தனியாள் வணிகர் வரைவிலக்கணம் தருக?**

**O.R. கிருஷ்ண சாமி** இலக்கணப் படிதனி நபரால் தனிநபருக்கென்று அமைக்கப்பட்டு இயங்கும் ஒரு வணிகம் தனியாள் வாணிகம் ஆகும்.

**9. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?**

- தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது.
- தனி வணிகரின் தொழிலில் ஏற்பட்ட கடனைச் செலுத்த தொழில் சொத்துகள் போதாத நிலையில் அவர் தன் சொந்த சொத்திலிருந்து கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும்.

**10. கூட்டாண்மை வரைவிலக்கணம் தருக?**

**இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் 1932** பிரிவு 4 ன் படி " எல்லோரும் சேர்ந்தோ அல்லது எல்லோருக்குமாக ஒருவரோ நடத்தும் தொழிலின் இலாபத்தைப் பகிர்ந்து கொள்ள ஒப்புக் கொண்டநபர்களிடையே நிலவும் உறவு முறை கூட்டாண்மை ஆகும்."

**11. கூட்டாண்மையில் உறுப்பினர்கள் எண்ணிக்கையை கூறு?**

**கூட்டாண்மையை துவங்க..........,**

குறைந்த பட்ச நபர்களின் எண்ணிக்கை - 2 நபர்கள்

- அதிக பட்ச நபர்களின் எண்ணிக்கை
  - வங்கித் தொழில்கள் - 10 நபர்கள்
  - வங்கி அல்லாத பிற தொழில்கள - 20 நபர்கள்

**12. கூட்டாளிகளுக்கிடையே நிலவும் உறவு முறை யாது?**

- கூட்டாண்மையில் கூட்டாளிகளுக்கிடையே முதல்வர், முகவர் உறவுமுறை நிலவுகிறது.
- ஒவ்வொரு கூட்டாளியும் உரிமையாளராகவும், அதே சமயத்தில் முகவராகவும் செயல்படுகிறார்கள்.
- முகமைக் கோட்பாட்டின் படி கூட்டாண்மை செயல்படுகிறது.

**13. உழையாக் கூட்டாளி என்பவர் யார்?**

தொழிலுக்காக **முதலீடு செய்து, நிர்வாகத்தில் பங்கு பெறாத கூட்டாளியே** உழையாக் கூட்டாளி ஆவார். இவரை உறங்கும் கூட்டாளி (அ) உழையாக் கூட்டாளி (அ) முதலிடும் கூட்டாளி எனவும் அழைக்கப்படுகிறார்.

**14. வரையறுக்கப்பட்ட கூட்டாண்மை என்றால் என்ன?**

ஒரு கூட்டாண்மையில், கூட்டாளிகளின் பொறுப்பு முதல் தொகை அளவிற்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருந்தால் அது வரையறுக்கப்பட்ட கூட்டாண்மை ஆகும்.இவ்வகைக் கூட்டாண்மையில் ஒரு கூட்டாளியின் பொறுப்பு மட்டும் வரையறாப் பொறுப்பு ஆகும். மற்ற கூட்டாளிகளின் பொறுப்பு வரையறு பொறுப்பு ஆகும்.

இக்கூட்டாண்மையை இந்தியாவில் உருவாக்க சட்ட அனுமதியில்லை.

**15. கூட்டு மற்றும் தனிப் பொறுப்பு என்றால் என்ன?**

**கூட்டுப் பொறுப்பு:**

கடனீந்தோர் தங்களுக்குச் சேரவேண்டிய கடன் தொகையை அனைத்துக் கூட்டாளிகளின் சொத்திலிருந்து பெற்றுக் கொள்வது கூட்டுப் பொறுப்பாகும்.

**தனிப்பொறுப்பு:**

கடனீந்தோர் தங்களுக்குச் சேரவேண்டிய கடன் தொகையை ஏதாவது ஒரு கூட்டாளியின் தனி சொத்தின் மீது வழக்கு தொடுத்துப் பெற்றுக் கொள்வது தனிப் பொறுப்பாகும்.

**16. அரசு நிறுமம் என்றால் என்ன?**

ஒரு நிறுமத்தின் செலுத்தப்பட்ட பங்கு முதலில் 51%ம் மத்திய அரசோ, மாநில அரசோ (அ) மத்திய மாநில அரசோ பெற்றிருந்தால் அது அரசு நிறுமம் ஆகும்.

எ.கா:

1. பெல்
2. செய்ல்

**17. கடனீட்டுப் பத்திரம் வரைவிலக்கணம் தருக?**

ஒரு நிறுமம் தான் பெற்ற கடனை ஒப்புக் கொள்ளும் வகையில் கடன் கொடுத்தவருக்கு அளிக்கும் பத்திரமே கடனீட்டுப் பத்திரம் ஆகும்.

அதாவது நிறுமம் தான் பெற்ற கடனை ஒப்புக் கொள்ள வகை செய்யும் ஆவணமே கடனீட்டுப் பத்திரம் ஆகும்.

**18. வரையறு பொறுப்பு என்றால் என்ன?**

பொதுவாக பங்குநர்களின் **செலுத்தப் பெறாத பங்குத் தொகை** அளவிற்கு மட்டுமே பொறுப்புகள் வரையறுக்கப்பட்டிருந்தால் அது வரையறு பொறுப்பாகும்.

- ❖ பங்குநர் முழு தொகையை செலுத்தியிருந்தால் அவருக்கு பொறுப்பு இல்லை.
- ❖ பங்குநர் முழுத் தொகையைச் செலுத்தாத போது, செலுத்த பெறாத தொகைக்கு அவர் பொறுப்பாகிறார்.

**19. சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன?**

பொது வரையறு நிறுமத்தில் பங்குதாரர்களுக்காக முதன் முதலில் கட்டாயம் கூட்டப்படும் கூட்டம் சட்டமுறைக் கூட்டம்.

இக்கூட்டத்தை தொழில் தொடக்கச் சான்றிதழ் பெற்ற ஒரு மாத காலத்திற்குப் பின், ஆறு மாதத்திற்குள் கூட்ட வேண்டும். நிறுமத்தின் வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே சட்டமுறைக் கூட்டம் நடைபெறும்.

**20. பகராள் என்றால் என்ன?**

ஒரு நிறுமத்தின் பொதுக் கூட்டத்தில் தனக்குப் பதில் கலந்துகொள்ள பங்குநரால் நியமிக்கப்படும் வேறொரு நபர் பகராள் ஆவார்.

பகராள் நிறுமக் கூட்டத்தில் வாக்களிக்கலாம், ஆனால் கருத்துக்கூற உரிமை இல்லை.

பகராள் என்னும் சொல் நிறுமக் கூட்டத்தில் கலந்து கொள்ள உறுப்பினரால் நியமிக்கப்படும் நபரையும், பகராளை நியமிக்கும் ஆணைப்பத்திரத்தையும் குறிக்கும்.

**21.கூட்டத்தில் குறைவெண் என்றால் என்ன?**

கூட்டத்தில் நிறைவேற்றும் தீர்மானம் செல்லத்தக்கதாக இருக்க வேண்டுமேயானால் கூட்டத்தில் நேரடியாகக் கலந்து கொள்ளவேண்டிய குறைந்தளவு உறுப்பினர் எண்ணிக்கையே குறைவெண் ஆகும். தனி வரையறு நிறுமமாயின் குறைந்தது 2 உறுப்பினர்களும், பொது வரையறு நிறுமமாயின் குறைந்தது 5 உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய குறைவெண் ஆகும்.

**22.நிகழ்ச்சி நிரல் என்றால் என்ன?**

கூட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் வரிசையே நிகழ்ச்சி நிரல் ஆகும். கூட்டத் தலைவருடன் கலந்துரையாடி நிறுமச் செயலர் நிகழ்ச்சி நிலை தயார் செய்கிறார்.

**23.நிகழ்ச்சிக் குறிப்பேடு என்றால் என்ன?**

நிறுமக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றிய உண்மையான, சரியான பதிவுகளை உள்ளடக்கியஏடு நிகழ்ச்சிக் குறிப்பேடு ஆகும். நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் உள்ள கருத்துக்கள் பொருள் வேறுபாடு இல்லாமல், சுருக்கமாகவும், உண்மையானதாகவும் இருக்க வேண்டும்.

**24. பத்திரம் என்றால் என்ன?**

பத்திரம் என்பது உடைமையின் உரிமையான பங்கையோ, அல்லது கடனீட்டு உரிமையான கடனீட்டுப் பத்திரத்தையோ குறிக்கும் ஒரு ஆவணமாகும்.

**பத்திரங்கள் உள்ளடக்குவது:**

கூட்டுப் பங்கு நிறுமப் பத்திரங்களான- பங்குகள், பங்குத் தொகுப்புகள், கடனீட்டுப் பத்திரங்கள்

அரசுப் பத்திரங்கள்.

**25. பங்கு மாற்றகத்தின் வரைவிலக்கணம்?**

***வேரஸ்டியின்***இலக்கணப்படி பங்கு மாற்றகம் என்பது "பத்திரங்களை வாங்குபவர்களும், விற்பவர்களும் ஒன்றுகூடி அனைத்து வகையான பத்திரங்களையும் கையாளக்கூடிய ஒரு இடமாகும்".

**26. போல்ட் என்பது யாது?**

"போல்ட் என்பது **பம்பாய்** நேரடி வாணிகம் என்பதன் சுருக்கமாகும்" இது மும்பை பங்குச் சந்தையில் **1995 மார்ச்** முதல் நடைமுறையிலுள்ள ஒரு வாணிக செயல்பாடாகும். உலக நாடுகளின் பங்கு வாணிகத்தில் பின்பற்றப்பட்டு வரும் கலப்பின வாணிக முறையில் ஒன்றாகும். இது ஆணை மற்றும் விலை நிலவரத்தின் அடிப்படையில் செயல்படுவதாகும்.

**27. போல்ட்டின் சாதனைகள் யாவை?**

1. சராசரி பதிலளிப்பு நேரம் இரண்டு வினாடிகளுக்கும் குறைவானது
2. ஒவ்வொரு நாளும் சராசரியாக 3.4 மில்லியன் சந்தைக் கேள்விகளைச் செயல் படுத்துகிறது.
3. இந்த போல்ட் தொகுதி 10,000க்கும் அதிகமான உபயோகிப்பாளருக்கு இணைப்பு கொடுக்க இயலும்.

**28.கூட்டுறவை வரையறு?**

**H.G. கால்வேர்ட்** இலக்கணப் படிகூட்டுறவுச் சங்கம் என்பது, உறுப்பினர்கள் தங்களின் பொருளாதார நலனைப் பெருக்கிக் கொள்வதற்காக மனிதர் என்ற முறையில் சமத்துவ அடிப்படையில், மக்கள் அவர்களாகவே ஒன்றுபடும் ஒரு அமைப்பாகும்.

**29.இராக்குடேல் முன்னோடிகள் என்பவர் யார்?**

இராபர்ட் ஓவன் என்பவர் கூட்டுறவின் தந்தை எனப் போற்றப்படுகிறார்.முதல் கூட்டுறவு இயக்கத்தை 1844ம் ஆண்டு 28 உறுப்பினர்களுடன் இராக்குடேல் என்ற பெயரில் தொடங்கப்பட்டது. இதுவே கூட்டுறவு அமைப்புகளுக்கு முன்னோடியாக இருப்பதால் இச்சங்கம் இராக்குடேல் முன்னோடிகள் சங்கம் எனப்படுகிறது.

**30. ஒரு நபர் ஒரு வாக்கு என்பதன் பொருள் என்ன?**

- கூட்டுறவுச் சங்கத்தின் மேலாண்மை **ஒரு நபருக்கு ஒரு வாக்கு** என்ற மக்களாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் அமைந்திருக்கிறது.
- கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்கள் எவ்வளவு பங்குகள் வைத்திருந்தாலும் ஒரு நபருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவரிடம் மேலாண்மையை ஒப்படைக்கப்படுகிறது.

**31. தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு சிறப்பங்காடிகளின் எடுத்துக் காட்டுகளைத் தருக?**

1. சென்னையிலுள்ள காமதேனு சிறப்பங்காடி.
2. ஈரோடு, கோவை மற்றும் திருச்சியிலுள்ள சிந்தாமணி சிறப்பங்காடி.
3. வேலூரில் உள்ள கற்பகம் சிறப்பங்காடி.
4. சேலத்திலுள்ள பொன்னி கூட்டுறவு சிறப்பங்காடி.

**32. ஆதரவுப் பங்காதாயம் என்றால் என்ன?**

- கூட்டுறவுச் சங்கம் தனது ஆண்டு இலாபத்தை **உறுப்பினர்களின் பங்களிப்பு** அடிப்படையில் பகிர்ந்தளிக்கிறது.
- கூட்டுறவு அமைப்பு ஈட்டிய இலாபத்தில் சட்டபூர்வ ஒதுக்கீடு போக 14%க்கும் மிகாமல் பங்காதாயம் வழங்கலாம்.
- மீதியுள்ள இலாபத்தை உறுப்பினர்கள் சங்கத்தின் *சேவையை எந்த அளவுக்கு* பயன்படுத்திக் கொண்டார்களோ அதன் அடிப்படையில் **மேலூதியமாக** அளிக்கப்படுகிறது. இதற்கு
- 
- பகிர்வு நீதி அல்லது ஆதரவுப் பங்காதாயம் என்று பெயர்.

**33. நாட்டுடமையாக்கம் என்றால் என்ன?**

தனியார் துறையில் இயங்கிவரும் தொழில் அமைப்புக்களை பல்வேறு காரணங்களால் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியாத போது, அவ்வாணிக அமைப்பை பொதுமக்களின் நலன் கருதி **அரசு தன்வசப்படுத்துவதே நாட்டுடமையாக்கம்** ஆகும்.

**34. அரசுத் தொழில் என்பதன் வரைவிலக்கணம் தருக.**

**A.H. ஹேன்சன்** வரைவிலக்கணம் - உற்பத்தி, விவசாயம், நிதி, வாணிகம் ஆகிய தொழில்களில் ஈடுபட்டிருக்கும் அரசுக்கு சொந்தமான தொழில்களை அரசுத் தொழில் எனலாம்.

அரசுக்கு சொந்தமானதும் அதன் கட்டுப்பாட்டிலும் செயல்படும் தொழில்கள் அரசுத் தொழில்களாகும்.

# எட்டு மதிப்பெண் வினாக்கள்

**1) இந்துக் கூட்டுக்குடும்பம் பற்றி சிறு குறிப்பு வரைக?**

- இம்முறை இந்தியாவில் தலைசிறந்து விளங்குகிறது.
- இது இந்துச் சட்டத்தின்படி ஒழுங்குபடுத்தப்படுகிறது.
- மூன்று தலைமுறையைச் சேர்ந்தவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு செயல்படுகிறது.
- இந்துக் கூட்டுக்குடும்ப தலைமை உறுப்பினருக்கு கர்த்தா என்று பெயர்.
- தந்தை, தாய், மகன், மகள், மகனின் மகன், மகனின் மகள், ஆகியோர் கூட்டு வாரிசுதாரர்களாகக் கருதப்படுகின்றனர்.
- இவர்களின் சொத்துக்கள் அனைத்தும் கூட்டுச் சொத்தாகும்.
- இவ்வணிக அமைப்பில் பெரும்பாலும் விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில்கள், கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள் போன்ற தொழில்களைச் செய்யப்படுகிறது.
- இந்துக் கூட்டுக்குடும்பம் என்பது, ஒரே இடத்தில் வசித்து, வழிபாடு நடத்தி, ஒரே வகையான உணவு வகைகளை உண்டு ஒரு குடும்பத்திலுள்ள சொத்தில் பங்கேற்பவர்களை உள்ளடக்கியதாகும்
- மிட்டக்சாரா, தாயபாகா எனும் இருசட்டக் கூறுகள் காணப்படுகிறது.

**2. ஏதேனும் இரண்டு தனிநபர் வியாபார அமைப்பு பற்றி குறிப்பு வரைக?**

**I. தனியாள் வணிகம்: (6)**

1. தனிநபரால் தனிநபருக்கென்று நடத்தப்படும் வியாபார அமைப்பு தனியாள் வணிகம் ஆகும்.
2. தனியாள் வணிகம் தொழில் வடிவமைப்புக்களில் மிகப் பழமையானது ஆகும்.
3. தனியாள் வணிகத்தில் ஏற்படும் இலாபநட்டம் முழுவதும் தனி நபரையே சேரும்.
4. தனியாள் வணிகத்தின் பொறுப்பு வரையறாப் பொறுப்பாகும்.

**II கூட்டாண்மை:(6)**

1. இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் 1932 பிரிவு 4 ன் படி "எல்லோரும் சேர்ந்தோ அல்லது எல்லோருக்குமாக ஒருவரோ, நடத்தும் தொழிலின் இலாபத்தைப் பகிர்ந்து கொள்ள ஒப்புக் கொண்ட நபர்களிடையே நிலவும் உறவு முறை கூட்டாண்மை ஆகும்."
2. சட்டத்திற்குட்பட்ட தொழிலைச் செய்து வருவதே கூட்டாண்மை ஆகும்.
3. ஒப்பந்தத்தின் காரணமாக கூட்டாண்மை உருவாகிறது..
4. கூட்டாண்மையைத் துவங்க குறைந்த பட்ச நபர்களின் எண்ணிக்கை - 2 நபர்கள், அதிக பட்ச நபர்களின் எண்ணிக்கை வங்கித் தொழிலாக இருந்தால் 10 நபர்களும், வங்கித் தொழில் அல்லாத பிற தொழில்களாக இருந்தால் 20 நபர்களும் இருக்க வேண்டும்.

**3. கூட்டாண்மை நிறுவனத்தில் இளவரின் நிலை பற்றி விவரி?**

**I. உரிமை வயது அடையும் முன் இளவர் நிலை:**

1) தொழிலின் சொத்திலும், இலாபத்திலும் ஒப்புக் கொண்ட படி பங்கு பெறும் உரிமையை பெறுகிறார்.
2) தொழிலின் சொத்துக்கள் மற்றும் இலாபத்தில் அவருக்குள்ள பங்கின் அளவிற்குத்தான் பொறுப்பு இருக்கும். இளவருடைய முதல் தொகைக்கு மேல் அவரது சொந்த சொத்துக்கள் பொறுப்பாகாது.
3) நிறுவனக் கணக்குகளை பார்வையிட்டு அவற்றை நகல் எடுக்க உரிமை உண்டு.

**II. உரிமை வயது அடைந்தபின் இளவரின் நிலை:**

1) உரிமை வயதடைந்த பின் கூட்டாளியாக தொடர்ந்திருக்க வேண்டுமா (அ) கூட்டாண்மையிலிருந்து வெளியேற வேண்டுமா என்பதை 6 மாதத்திற்குள் இளவர் தீர்மானித்து அறிவிக்க வேண்டும்.

2) ஆறு மாதத்திற்குள் அறிவிக்காவிட்டால் கூட்டாண்மையில் இளவராக சேர்த்துக் கொள்ளப்பட்ட நாள் முதற்கொண்டு நிறுவனக் கடன்களுக்கு பொறுப்பாவார்.

3) கூட்டாளியாக தொடர விருப்பமில்லை என அறிவித்தால் அறிவிப்பு செய்த நாளிலிருந்து கூட்டாண்மையின் கடன்களுக்கு அவர் பொறுப்பாக மாட்டார்.

**4. கூட்டாண்மையை பதிவு செய்யாததால் ஏற்படும் குறைபாடுகள் யாவை?**

1. நிறுவனத்திற்கு எதிராகவோ அல்லது ஏனைய கூட்டாளிகள் மீதோ தனக்குள்ள உரிமையை நிலைநாட்ட பதிவுசெய்யாத நிறுவனத்தின் ஒரு கூட்டாளி வழக்குத் தொடர முடியாது. (முன்னாள் கூட்டாளி உட்பட)
2. மூன்றாம் நபரிடமிருந்து தனக்குச் சேர வேண்டிய பாக்கிப் பணத்தை பெற எந்த உரிமையியல் நீதி மன்றத்திலும் பதிவு செய்யாத நிறுவனம் வழக்கு தொடுக்க முடியாது.
3. பதிவு செய்யாத நிறுவனம் மூன்றாம் நபருக்கு எதிராக தொகை ரூ. 100 க்கு மேல் திரும்பப் பெற தன் உரிமையைச் செயல்படுத்த இயலாது.
4. தனது கூட்டாளிகளை எதிர்த்து, நிறுவனம் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது.

**5. கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கம் யாது? (ஏதேனும் 10 மட்டும்)**

**கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கம்:**

1. நிறுவனத்தின் பெயர்
2. ஒப்பந்த நாள் மற்றும் தொழில் புரியும் இடம்
3. அனைத்துக் கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி
4. நிறுவனம் மேற்கொள்ள இருக்கும் தொழிலின் தன்மை
5. கூட்டாண்மையின் கால வரையறை
6. கூட்டாளி வழங்கிய முதல் தொகை
7. கூட்டாளி நிறுவனத்திலிருந்து எடுக்கும் தொகை.
8. இலாபப் பகிர்வு விகிதம்.
9. உழைக்கும் கூட்டாளிகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய ஊதியம்.
10. முதல் மற்றும் எடுப்பு மீது வட்டி

**6.கூட்டாளிகளின் பல்வேறு வகைகள் யாவை?**

**1. உழைக்கும் கூட்டாளி:**

முதலீடு செய்து தொழிலை நிர்வகிக்கும் கூட்டாளிக்கு உழைக்கும் கூட்டாளி என்று பெயர். இவரை பணிபுரியும் கூட்டாளி அல்லது மேலாண்மைக் கூட்டாளி அல்லது பொதுக் கூட்டாளி எனவும் அழைக்கலாம்.

**2. உறங்கும் கூட்டாளி அல்லது உழையாக் கூட்டாளி:**

தொழிலுக்காக **முதலீடு செய்து, நிர்வாகத்தில் பங்கு பெறாத கூட்டாளியே** உழையாக் கூட்டாளி ஆவார்.

**3. பெயரளவுக் கூட்டாளி:**

இவர் தொழிலுக்கு முதலிடுவதும் இல்லை, நிர்வாகத்தில் பங்கேற்பதும் இல்லை. தன் பெயரைப் பயன்படுத்தி கூட்டாண்மையின் செல்வாக்கை உயர்த்திக் கொள்ள உதவுகிறார்.இவருக்கு இலாபத்தில் பங்கில்லை.

**4. இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி:**

ஒரு சில கூட்டாளிகள் ஒப்பந்தத்தின் படி இலாபத்தை மட்டும் பகிர்ந்து கொள்வார்கள். நட்டத்தைப் பகிர்ந்து கொள்வதில்லை. இவர் நிர்வாகத்தில் பங்குபெற முடியாது.

**7. அமைப்பு முறையேடு என்றால் என்ன? அதில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?**

**அமைப்பு முறையேடு:**

நிறுமம் தயாரிக்க வேண்டிய **இன்றியமையாத பத்திரங்களுள்** அமைப்பு முறையேடு ஒரு முதன்மை சிறப்பு வாய்ந்த ஆவணமாகும்.

நிறுமச் **செயல்பாட்டு எல்லைகளையும், நோக்கங்களையும்** வரையறுத்துக் கூறப்பட்டிருக்கும், ஆவணம் அமைப்பு முறையேடாகும்.

**அமைப்பு முறையேட்டின் உள்ளடக்கங்கள்:**

**1. பெயர் குறித்த உட்பிரிவு:**

நிறுமத்தின் பெயர் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**2. இடங்குறித்த உட்பிரிவு:**

இப்பிரிவில் நிறுமத்தின் பதிவு அலுவலகம் அமைந்துள்ள மாநிலத்தின் பெயரைக் குறிப்பிட வேண்டும்.

**3. நோக்கம் குறித்த உட்பிரிவு:**

நிறுமம் ஈடுபடக்கூடிய நடவடிக்கைகளைப் பற்றி இதில் குறிப்பிடப்பட்டிருக்கும். இதில் குறிப்பிடாத எச்செயலிலும் நிறுமம் ஈடுபடக்கூடாது. நிறுமத்தின் அதிகபட்ச செயல்பாட்டை இப்பிரிவு தீர்மானிக்கிறது.

**4. பொறுப்பு குறித்த உட்பிரிவு**

இங்கு உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாக கூறப்பட்டிருக்கும். ஒப்புறுதி நிறுமமாக இருந்தால் பங்குநரின் ஒப்புறுதித் தொகை இங்கு குறிப்பிடப்படும்.

**8. பங்குகளை வட்டத்தில் வெளியிட சில நிபந்தனைகளை விளக்குக?**

1. உயர்ந்தளவு தள்ளுபடி வீதம் பங்கின் முகமதிப்பில் 10 % மிகக் கூடாது.
2. மைய அரசு அனுமதித்த நாளிலிருந்து இரு மாதங்களுக்குள் பங்குகளை வட்டத்தில் வெளியிட வேண்டும்.
3. தொழில் தொடங்க உரிமை கிடைத்த நாளிலிருந்து குறைந்தது ஓராண்டாவது சென்றிருக்க வேண்டும்.
4. ஒரு நிறுமம் முன்னரே வெளியிட்ட பங்கு வகையைத் தான்மீண்டும் வட்டத்தில் வெளியிட வேண்டும். முதன் முதலில் வெளியிடும் பொழுதே ஒரு நிறுமம் தன் பங்குகளை வட்டத்தில் வெளியிடக் கூடாது.

**9. முதலீட்டாளர்களுக்கும், ஊக வாணிகர் இவர்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?**

| வ. எண். | முதலீட்டாளர்கள் | ஊக வணிகர்கள் |
|---|---|---|
| 1. | தங்கள் முதலீடுகளின் பாதுகாப்பையே பெரிதும் விரும்புவார்கள். | தங்கள் முதலீடுகளின் மதிப்பை அதிகரிப்பதிலும், இலாபம் பெறுவதிலும் குறியாக இருப்பார்கள். |
| 2. | தங்கள் முதலீடுகளின் மூலம் வருவாய் ஈட்டுவதையே விரும்புவார்கள். | பத்திரங்களை வாங்கி விற்பதன் மூலம் கிடைக்கும் இலாபத்தையே விரும்புவார்கள். |

| | | |
|---|---|---|
| 3. | நீண்ட காலத்துக்குப் பத்திரங்களைத் தம்மிடம் வைத்திருப்பார். | பத்திரங்களை உடனடியாக விற்கவோ, வாங்கவோ முயற்சிப்பார். |
| 4. | இடர்பாடு குறைவு | இடர்பாடு அதிகம் |
| 5. | நிலையான வருவாய் | ஆதாயம் நிலையற்றது. |

**10.ஊக வணிகர்களின் வகைகளை விவரி?**

**1. காளை:**

i. பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊக வணிகர் காளை அல்லது தெஜிவாலா என்றழைக்கப்படுகிறார்.

ii. இவர் எதிர்காலத்தில் அதிக விலையில் பத்திரங்களை விற்க இயலும் என்ற எண்ணத்தில் தற்போது பத்திரங்களை வாங்க முனைகிறார்.

iii. இவர்,**எல்லாம் நன்மைக்காகவே** நடைபெறும் என்ற மனப்பாங்கு உடையவர்.

**2. கரடி:**

i. எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணும் ஊக வணிகர் கரடி அல்லது மண்டிவாலா என்றழைக்கப்படுகிறார்.

ii. ஒரு கரடி ஊக வணிகர் எதிலும் **பின்னோக்கிய மனப்பாங்கு** கொண்டவர்.

**3. கலைமான்:**

i. கலைமான் ஊக வணிகர் **முன்னெச்சரிக்கைஉடையவர்.**

ii. இவர் முனைம வேட்டையாளர் என்றும் அழைக்கப்படுகிறார்.

**4. முடவாத்து:**

i. தற்போதைய தம் நடவடிக்கைகளிலுள்ள இடர்பாடுகளை தீர்ப்பதில் போராடிக் கொண்டிருக்கின்ற ஒரு கரடி ஊக வாணிகரை முடவாத்து என அழைக்கப்படும்.

**11. கூட்டுறவுச் சங்கத்தின் குறைபாடுகளை விவரிக்க?**

***கூட்டுறவுச் சங்கத்தின் குறைபாடுகள்***:

**1. திறமையற்ற மேலாண்மை:**

கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்கள், அமைப்பை மேலாண்மை செய்ய போதுமான திறமையும் அனுபவமும் இல்லாதவர்களாகவும், ஆர்வமில்லாதவர்களாகவும் இருக்கிறார்கள்.

**2. வரையறு முதல் (அ) குறைந்தளவு முதல்:**

குறைந்த வளங்கள் உள்ள மனிதர்களால் கூட்டுறவு சங்கம் அமைக்கப்படுவதாலும், ஒரு நபருக்கு ஒரு வாக்கு என்ற முறையும் உறுப்பினர்கள் அதிக முதலீடு செய்வதை தடைசெய்கிறது.

**3. தக்க தூண்டுகோலின்மை:**

இலாப நோக்கு இல்லாமையும், மேலாண்மை செய்பவரின் பொறுப்பு குறைய காரணமாகிறது. பணியாளர்கள் குறைந்த ஊதியம் பெறுவதால் உழைப்பில் ஆர்வம் காட்டுவதில்லை.

**4. ஒற்றுமையிண்மை:**

சில வேளைகளில் உறுப்பினர்கள் அவர்களுக்குள் ஒற்றுமையாய் இருப்பதில்லை. இதனால் கூட்டுறவு அமைப்பின் வியாபாரம் பாதிக்கப்படுகிறது.

5. **உரிமையை மாற்ற இயலாமை:**
கூட்டுறவுச் சங்கத்தின் பங்குகளை ஒருவரிடமிருந்து மற்றவருக்கு மாற்றிக் கொடுக்க இயலாது. சங்கத்திலிருந்து விலக விரும்புவோர் பங்குகளைச் சங்கத்தில் திருப்பிக் கொடுத்து பங்குமுதல் தொகையைத் திரும்ப பெறலாம்.

6. **இரகசியம் காக்கப்படாது:**
கூட்டுறவுச் சங்கத்தின் நடவடிக்கைகள் சங்கக் கூட்டங்களில் விவாதிக்கப்படுகிறது. ஒவ்வொரு உறுப்பினரும் சங்க ஏடுகளை பார்வையிட உரிமை உண்டு. இதனால் செயல்முறை இரகசியங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க முடியாது.

7. **அதிகமான அரசு தலையீடு:**
கூட்டுறவு அமைப்பின் தினசரி நடவடிக்கையை, அரசின் சட்டப்படியும், கட்டுப்பாட்டுக்குட்பட்டும் நடத்தப்படுகின்றன. கூட்டுறவுச் சங்க பதிவாளரிடம் அனைத்த அறிக்கைகளையும் சமர்ப்பிக்க வேண்டும்.

8. **கடன் வசதியின்மை:**
நுகர்வோர் கூட்டுறவு சங்கம் உறுப்பினர்களுக்கு கடன் வசதியளிப்பதில்லை. சரக்குகளை ரொக்கம் கொடுத்து வாங்க உறுப்பினர்கள் விரும்புவதில்லை.

**12. கூட்டுறவுச் சிறப்பங்காடியின் பொருள் தந்து அதன் சிறப்பியல்புகளைத் தருக.**

**கூட்டுறவுச் சிறப்பங்காடிகள்:**

- கூட்டுறவுச் சிறப்பங்காடி என்பது ஆங்கிலத்தில் தோற்றம் பெற்ற பெயராகும்.
- "இது பேரளவில் நடத்தப்படும் சில்லரை வியாபார அமைப்பாகும்."
- நாள்தோறும் பயன்படுத்தப்படும் வீட்டுப் பொருட்களை பல துறைகளில் விற்பாண்மையர் உதவியின்றி விற்கப்படுகிறது.
- இது பொதுவாக நிறுமத்தைப் போன்று இலாப நோக்குடன் செயல்படுகிறது.

**சிறப்பியல்புகள்:**

1. பேரளவு சில்லறை விற்பனை செய்யும் அமைப்பு.
2. பலவகையான பொருட்கள் கிடைக்குமிடம்.
3. சுயசேவைப்பிரிவு முறையில் நடத்தப்படுகிறது.
4. சுயசேவைப்பிரிவில் விற்பாண்மையர் தேவை ஏற்படுவதில்லை.
5. இதன் தோற்றம் பல துறைகளைக் கொண்டதாகும்.
6. ரொக்க விற்பனை அடிப்படையில் வியாபாரம் செய்யப்படும்.
7. பொருட்கள் சுத்தம் செய்யப்பட்டு, பல கட்டுமங்களில் விற்கப்படுகின்றன.
8. பொருட்களில் கலப்படம் தவிர்க்கப்படுகிறது.

**13.பொதுத் துறைக்கும், தனியார் துறைக்கும் உள்ள வேறுபாடுகளை வரைக?**

**பொதுத்துறைக்கும், தனியார் துறைக்கும் உள்ள வேறுபாடுகள்:**

| வ. எண் | பொதுத்துறை | தனியார் துறை |
|---|---|---|
| 1. | 1) சேவை நோக்கம், 2) மக்களிடையே ஏற்றத் தாழ்வுகளை அகற்றுதல் என இரட்டை நோக்கம் கொண்டுள்ளது. | இலாப நோக்கம் மட்டுமே கொண்டுள்ளது. |
| 2. | வரையறா நிதி: மக்களின் வங்கி சேமிப்பை திரட்டியும் மற்றும் கடன் பத்திரம் வெளியிடுவதன் மூலமும் அதிகதி நிதி திரட்ட முடியும். | வரையறுக்கப்பட்ட நிதி: நாட்டு மக்களின் சேமிப்பைத் திரட்டுவதும், வெளி நாட்டிலிருந்து உதவி பெறுவதும் இதற்கு எளிதல்ல. |
| 3. | ஒரு சிலரிடம் செல்வமும், வருமானமும் | பொருளாதார வலிமைச் செறிவைத் |

| | | |
|---|---|---|
| | செறிவடைவதைத் தடுக்க முடியும். | தூண்டுகிறது. |
| 4. | தனியார் துறையினரால் புறக்கணிக்கப்பட்ட தொழில்களை ஏற்று நடத்தும். | அபாயம் குறைவாக உள்ளதும், இலாபம் அதிகமாகவுள்ள தொழில்களை மட்டுமே தனியார் துறை நடத்தும். |

## 20 மதிப்பெண்கள்

**1. அமைப்பின் கோட்பாடுகளை சுருக்கமாக விவரி?**
**அமைப்பின் கோட்பாடுகள் :**

**1. நோக்கங்களின் ஒருமை :**
ஒரு அமைப்பின் நோக்கமானது இலக்கினை அடையக்கூடியதாக இருக்க வேண்டும். ஒரு நிறுவனத்தின் குறிக்கோள்கள் தெளிவாகவும் நிறைவேறும் வகையிலும் அதன் நடவடிக்கைஇருக்க வேண்டும்.

**2. வேலைப் பகிர்வு:**
ஒரு தொழில் அமைப்பின் மொத்தப் பணிச்சுமையை பகிர்வு செய்வதே வேலைப் பகிர்வாகும். இதை "துறைப்படுத்துதல்" எனவும் அழைக்கலாம்.

**3. கட்டுப்பாட்டு வீச்செல்லை:**
ஒரு அமைப்பின் மேலாண்மையர் தனக்குக் கீழ் அதிகப் பணியாளர்களை நிர்வகிக்க முடியாது. ஒரு அதிகாரி எத்தனை பணியாளர்களை நிர்வகிக்க முடியும் என்பதை கட்டுப்பாட்டு வீச்செல்லை குறிக்கும்.

**4. தரவரிசைக் கோட்பாடு:**
ஆணையுரிமையின் வரிசை உயர்மட்டத்திலுள்ள உயர் அலுவலரிடமிருந்து கீழ்மட்டத்திலுள்ள தொழிலாளர்கள் வரை படிப்படியாக கீழ்நோக்கி வரவேண்டும். இதற்கு "கட்டளை இணைப்பு" என்று பெயர்.

ஓர் உயர் அலுவலர் தனக்கு கீழ் பணியாற்றும் பணியாளருக்கு ஆணையுரிமையை வழங்குகிறார்.

**5. பணிவழி வரைவிலக்கணம்:**
ஒரு பணியாளரின் ஆணையுரிமையும், பொறுப்பும் தெளிவாக வரையறுக்கப்படுதல் அவசியம். ஒவ்வொரு பணிகளுக்கிடையேயுள்ள தொடர்புகளைப் பற்றி தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

**6. ஒரு முனை இயக்கம்:**
ஒவ்வொரு குழு நடவடிக்கைகளின் நோக்கங்கள், வெற்றியடைய ஒரு தலைமையும் திட்டமிடுதலும் இருக்க வேண்டும். ஒருஅமைப்பின் பணிகளை நிறைவேற்றஇது அவசியமாகிறது.

**7. ஒருங்கிணைத்தல்:**
ஒரு அமைப்பின் விரும்பத்தக்க இலக்கினை அடைய, அதன் அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்க வேண்டும்.

ஒரு பண்டகசாலை இலாபம் பெறவேண்டுமெனில் அதன் கொள்முதல் துறையும் விற்பனைத் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

**8.அதிகார ஒப்படைவு:**
ஒப்படைவு என்பது பணிகளின் ஒரு பகுதியை கீழ் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஒப்படைப்பதாகும். அதாவது உயர் அலுவலர் தனக்குக் கீழ் பணியாற்றும் பணியாளர்க்குச் சில பணிகளை ஒப்படைக்கிறார்.

**9. திறமை:**

எந்தவொரு நிறுவனத்திற்கும் "**திறமையே" மந்திரச் சொல்லாக** இருக்க வேண்டும். ஒரு குறிக்கோளை அடையவும், குறைந்த செலவில் பணிகளை நிறைவேற்றவும், திறமையான முறையில் செயல்பாடு இருக்க வேண்டும்.

**10. கட்டளை ஒருமை (ஒருமை உத்திரவு):**

ஒவ்வொரு பணியாளரும் கட்டளைகளை தனது உயர் அதிகாரிகளிடமிருந்து பெறவேண்டும். ஒரு பணியாளர் இரண்டு உயர் அதிகாரிகளின் கீழ் பணியாற்றுவது கடினம்.

ஒரு பணியாளர் இரண்டு அதிகாரிகளின் கீழ் பணியாற்றுவதை தவிர்க்கப்பட வேண்டும். அப்படி இருந்தால் குழப்பம் ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.

**2. பல்வேறு வகையான தொழில் வடிவமைப்புகளைப் பற்றி சுருக்கமாக எழுதுக?**

**1. தனி வாணிகம்:**

தனிநபரால் தனிநபருக்கென்று நடத்தப்படும் வியாபார அமைப்பு தனியாள் வணிகம் ஆகும். தனியாள் வணிகம் தொழில் வடிவமைப்புக்களில் மிகப் பழமையானது ஆகும்.

தனியாள் வணிகத்தில் ஏற்படும் இலாபநட்டம் முழுவதும் தனி நபரையே சேரும். தனியாள் வணிகத்தின் பொறுப்பு வரையறாப் பொறுப்பாகும்.

.

**2. இந்துக் கூட்டுக்குடும்ப வாணிகம்:**

இம்முறை இந்தியாவில் தலைசிறந்து விளங்குகிறது. மூன்று தலைமையைச் சேர்ந்தவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு செயல்படுகிறது.

இவ்வணிக முறையில், குடும்ப தலைமை உறுப்பினருக்கு கர்த்தா என்று பெயர். மேலும் இவ்வாணிகத்தில் தந்தை,தாய் மகன், மகள் மகனின் மகன், மகனின் மகள் ஆகிய அனைவரும் உறுப்பினராக அடங்குவார்கள்.

**3. கூட்டாண்மை:**

கூட்டாண்மை ஒப்பந்தத்தின் காரணமாக உருவாகிறது. கூட்டாண்மையைத் துவங்க குறைந்த பட்ச நபர்களின் எண்ணிக்கை - 2 நபர்கள், அதிக பட்ச நபர்களின் எண்ணிக்கை வங்கித் தொழிலாக இருந்தால் 10 நபர்களும், வங்கித் தொழில் அல்லாத பிற தொழில்களாக இருந்தால் 20 நபர்களும் இருக்க வேண்டும்.

**4. கூட்டுப் பங்கு நிறுமம்:**

பேரளவு தொழில் செய்வதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு கூட்டுப் பங்கு நிறுமம் ஆகும். இது துவங்க அதிக முதல் தேவை.

**5. கூட்டுறவு அமைப்பு:**

கூட்டுறவுச் சங்கம் என்பது நபர்கள் தாமாகவே அமைத்துக் கொள்ளும் சங்கமாகும். ஒரே இடத்தில் வசிப்பவர்கள் தங்களின் பொருளாதார நலன் கருதி ஒன்று சேரும் ஒரு அமைப்பே கூட்டுறவு ஆகும்.

6. **பன்னாட்டு நிறுமங்கள்:**

பல நாடுகளில் இயங்கி வரும் நிறுமத்தையே பன்னாட்டு நிறுமம் என்று அழைக்கப்படுகிறது. ஒரு பன்னாட்டு நிறுமம் என்பது ஒரு வியாபாரத்தை தொடங்கி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் மேலாண்மை செய்து வருவதாகும்.

**7. துறைமுறை அமைப்பு:**

பொதுத்துறை அமைப்பில் மிகவும் பழமையானது துறைமுறை அமைப்பாகும். இது அரசாங்கத்தின் அமைச்சகத்தால் நடத்தி, நிர்வாக அதிகாரிகளால் நிர்வாகம் செய்யப்படுகிறது.

**8. பொதுக் கூட்டுரு**

பாராளுமன்றத்தில் உருவாக்கப்பட்ட தனிச் சட்டத்தால் உண்டாக்கப்படும் ஒரு அமைப்பு பொதுக்கூட்டுரு ஆகும். இது ஒரு சட்டமுறைக் கழகமாகும். ஏனெனில் இது தனிச்சட்டத்தால் உருவாக்கப்படுகிறது.

**9. அரசு நிறுமங்கள்**

ஒரு நிறுமத்தில் **"செலுத்தப்பட்ட பங்கு முதலில் 51%ம்"** மத்திய அரசோ அல்லது மாநில அரசோ அல்லது மத்திய மாநில அரசுகளோ பெற்றிருந்தால் அது அரசு நிறுமம் ஆகும்.

**10. வாரிய அமைப்பு:**

அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட பொதுத்துறை அமைப்பில் ஒன்றே வாரிய அமைப்பாகும். இந்த அமைப்பின் மேலாண்மை அரசால் நியமிக்கப்பட்ட குழுவிடம் உள்ளது. இவ்வமைப்பு தனி சட்டத்தால் ஒழுங்கு படுத்தப்படுகிறது.

1. தமிழ்நாடு மின்சார வாரியம்

**3. பன்னாட்டு நிறுமங்கள் பற்றி நீ அறிவது யாது? அதன் சிறப்பியல்புகள் பற்றி எழுதுக.**

பன்னாட்டு நிறுமம் என்ற சொல் பின்வரும் பொருளைத் தருகிறது.

**பன் + நாடு + நிறுமம்**

**பன்**= பல (அ) அநேக

**நாடு**= தேசம் (அ) தேசங்கள்,**நிறுமம்**= வியாபார அமைப்பு

இவ்வாறாக, பன்னாட்டு நிறுமம் என்பது பல நாடுகளிடையே இயங்கி வரும் வியாபார அமைப்பைக் குறிக்கிறது.

**1. வரைவிலக்கணம்**

பல நாடுகளில் இயங்கி வரும் நிறுமத்தையே பன்னாட்டு நிறுமம் என அழைக்கப்படுகிறது. இதற்கு பன்னாட்டு வியாபாரம், உலக வியாபாரம் மற்றும் உலக அளவில் பலம் மிக்கவன் என பல பெயர்கள் உண்டு.

பன்னாட்டு நிறுமம் என்பது, ஒரு வியாபாரத்தை தொடங்கி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் மேலாண்மை செய்து வருவதாகும்.

**2 எ.கா.**

1. யூனிலிவர் லிமிடெட் – பிரிட்டிஷ்
2. பிலிப்ஸ் – டச்சு
3. யூனியன் கார்பைடு – அமெரிக்கா
4. இன்டர்நேஷனல் பிசினஸ் மெஷின் – அமெரிக்கா
5. கோகோ கோலா கழகம் – அமெரிக்கா

**3.பன்னாட்டு நிறுமத்தின் செயல்பாடுகள்**

இன்று உலகளவில் 500 முதல் 700 வரை பன்னாட்டு நிறுமங்கள் செயல்படுகின்றன. இதில் சரிபாதி அமெரிக்காவிலும் மீதியுள்ளவை அதற்கு வெளியிலும் காணப்படுகின்றன.

அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்டுள்ள பன்னாட்டு நிறுமங்களுக்குத் தேவையான முதலீடுகளை ஐக்கிய நாடுகள்,U.K,ஜெர்மனி, ஜப்பான், பிரான்ஸ் மற்றும் கனடா ஆகிய நாடுகளிலிருந்து நேரிடையாகப் பெறுகிறது.

**4.பன்னாட்டு நிறுமத்தின் சிறப்பியல்புகள்:**

1. ஒரு பன்னாட்டு நிறுமம் ஒரே சமயத்தில் பல நாடுகளில் நடத்தப்படுகிறது.
2. பல நாடுகளிடையே நடைபெறும் வியாபார அமைப்பு என்பதால் மிகப்பெரிய அளவில் செயல்படுகிறது.
3. பன்னாட்டு நிறுமம் அயல்நாட்டு முதலீட்டை நேரடியாகப் பெறுகிறது.
4. வளரும் நாடுகளின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் வேலைவாய்ப்பை உருவாக்குகிறது.
5. வளரும் நாடுகளில் காணப்படும் இயற்கை வளங்களை முழுமையாகப் பயன்படுத்த உதவுகிறது.

**4.தனி நபர் வணிகத்தின் குணாதியசங்கள் யாவை?**

**1. தனிநபர் உரிமையும் கட்டுப்பாடும்:**

தனிநபரால் நடத்தக்கூடிய வியாபார அமைப்பு தனியாள் வணிகமாகும். தனி ஒருவரே உரிமையாளராகவும்,வணிகத்தின் தலைவராகவும் செயல்பட்டு வணிகத்தை கட்டுப்படுத்துகிறார்.

**2. மூலதனம்: (முதல் )**

தனியாள் வாணிகத்தில், ஒருவர் மட்டுமே சொந்த சேமிப்பிலிருந்தோ அல்லது கடன்பெற்று முதலீடு செய்கிறார்.

**3. வரையறாப் பொறுப்பு:**

தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது, தனி வணிகரின் தொழிலில் ஏற்பட்ட கடனை செலுத்த தொழில் சொத்துகள் போதாத நிலையில் அவர் தன் சொந்த சொத்திலிருந்து கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும்.

**4. இலாப நட்டம்:**

தனியாள் வணிகத்தில் ஏற்படும் இலாபநட்டம் முழுவதும் தனி நபரையே சாரும். இதனையாருடனும் பங்கிட்டுக் கொள்ளத் தேவையில்லை.

**5. தனிச்சட்டம் இல்லை :**

கூட்டாண்மையை ஒழுங்கு படுத்த இந்தியக் கூட்டாண்மைச் சட்டமும், நிறுமத்தை ஒழுங்குபடுத்த இந்திய நிறுமச் சட்டமும், இருப்பதைப் போல் தனியாள் வணிகத்தை ஒழுங்குபடுத்த தனி சட்டம் ஏதுவும் இல்லை.

**6. பதிவு :**

கூட்டாண்மை, நிறுமம் போன்ற அமைப்புகளை அவைகளுக்கான சட்டத்தின் படி பதிவு செய்யப்படுகின்றது. ஆனால் தனி வணிகர் தன் தொழிலை பதிவு செய்ய வேண்டியதில்லை.

**7. வாழ்வு :**

தனியாள் வணிகத்திற்கு *நீடித்த வாழ்வு கிடையாது.* தனியாள் வணிகரின் வாழ்வைப் பாதிக்கும் எக்காரணமும் அவருடைய தொழிலையும் பாதிக்கும்.

**8. எளிமை :**

தனியாள் வணிகத்தை தொடங்குவதும், கலைப்பதும் எளிது. தனியாள் வாணிகத்தைக் கலைக்க, சட்ட விதிகளை பின்பற்ற வேண்டியதில்லை.

**9. உள்ளூர் வியாபாரம் :**

பெரும்பாலும் தனியாள் வாணிகம் குறிப்பிட்ட தெரு, வட்டாரம் அல்லது கிராம அளவிலேயே நடைபெறுகின்றது.

**10. சுயவேலை வாய்ப்பு :**

தனியாள் வணிகர் பெரும்பாலும் தனது சொந்த உழைப்பை வியாபாரத்தில் பயன்படுத்துகிறார். இவர், தேவைப்படும்போது சில பணியாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார்.

**5. சமுதாயத்தில் தனியாள் வணிகரின் பங்கினை விவரி?**

**சமுதாயத்தில் தனியாள் வணிகரின் பங்கு:**

1. ***வேலையில்லா பிரச்சினைக்குத் தீர்வு:***

தனியாள் வணிகம் குறைந்த கல்வியுடையவர்களுக்கும் கல்வியறிவு அற்றவர்களுக்கும் வேலைவாய்ப்பு அளித்து வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதில் பெரும்பங்கு வகிக்கிறது.

*2.முதலீட்டிற்கான வாய்ப்பு:*

சிறு முதலீட்டாளர்கள், குறைந்த முதலுடன் தொழில் தொடங்க தனி வணிகம் வாய்ப்பளிக்கிறது. இவ்வணிகம் சிறு முதலீட்டாளர்களின் சேமிப்பை உற்பத்திக்குப் பயன்படுத்த உதவுகிறது.

*3.குறைந்த விலையில் பொருட்களை அளித்தல்:*

நிர்வாகச் செலவு குறைவாக உள்ளதால் தனி வணிகர் பொருட்களின் அதிகபட்ச விலையை விட குறைவான விலைக்கு விற்பனை செய்கிறார்.

*4.சிறு உற்பத்தியாளருக்கு உதவுதல்:*

உள்ளூர் உற்பத்தியாளரிடமிருந்து பெரும்பான்மையான பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் உள்ளூர் சிறு உற்பத்தியாளர்கள் தனி வணிகரால் பயன்பெறுகின்றனர்.

*5.தரமான பொருட்களை அளித்தல்:*

தனிவணிகர் உள்ளூர் அளவில் வியாபாரத்தை நடத்துவதால் வியாபாரத்தின் நன்மதிப்பைக் காக்க தரமான பொருட்களை விற்பனை செய்கிறார். விற்ற பொருளில் குறையிருப்பின் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறார்.

*6.தர்மசிந்தனையுடைய நடவடிக்கை (பொதுச்சேவை நடவடிக்கை):*

தனி வணிகர்கள் தங்களுக்குள் குழுக்களை ஏற்படுத்திக் கொண்டு கண் பரிசோதனை முகாம்கள், பூங்காக்களை பராமரித்தல், பாதையில் தடுப்புகளை ஏற்படுத்துதல், பள்ளிகளுக்கு அறைகலன்களை வழங்குதல் போன்ற பல்வேறு சமுதாய முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள்.

*7.வருமானம் மற்றும் வளங்களைச் சமமாகப் பகிர்ந்தளித்தல்:*

வியாபார உலகில் பலர் தனியாள் வணிகராக ஈடுபடுவதால், ஒரு சிலரிடமே வருமானம் குவிவதில்லை.

*8.நுகர்வோருக்கு உதவுதல்:*

தனியாள் வணிகர்கள் நுகர்வோரின் வீட்டு வாசலிலேயே பொருட்களை கிடைக்கச் செய்கிறார்கள். இதனால் நுகர்வோரின் நேரமும், உழைப்பும், மிச்சப்படுத்தப்படுகிறது.

**6. தனிநபர் கட்டுப்பாடு உலகிலேயே சிறந்தது விவரி?**

**தனிநபர் கட்டுப்பாடு சிறந்தது:**

**வில்லியம் பேசட் அவர்கள்** "உலகிலேயே தனிநபர் கட்டுப்பாடுதான் சிறந்தது என்று கூறியுள்ளார். சிறிய தொழிலாக இருந்தால் மட்டுமே ஒருவர் அவ்வியாபார நடவடிக்கைகள் அனைத்தையும் திறமையாக மேற்பார்வை செய்ய இயலும்" என்றும் கூறுகிறார்.

**தனிநபர் கட்டுப்பாட்டுக்குச் சாதகமானவை:**

**1.எளிதாகவும், விரைவாகவும் அமைத்தல்**

**2.நேரடிக் கட்டுப்பாடு**

**3.முயற்சி மற்றும் பலன் இணைதல்**

**4.வியாபார இரகசியம் காத்தல்**

**5.நுகர்வோரிடம் நெருங்கிய தொடர்பு**

**6.இலாபம் முழுவதையும் அனுபவித்தல்**

**7.சிக்கன மேலாண்மை**

**8.சட்ட சிக்கல் இன்மை**

**9.பணியாளரிடம் நேரடித் தொடர்பு**

**10.சமுதாய விருப்பம்.**

**தனிநபர் கட்டுப்பாட்டின் குறைபாடுகள்**

தனிநபர் கட்டுப்பாட்டில் பல்வேறு நன்மைகள் காணப்படினும் சில குறைபாடுகள் உண்டு. வியாபார நடவடிக்கைகள் அனைத்தையும் தனி நபர் ஒருவரால் மட்டுமே மேற்கொள்ள இயலாது.

தனி வணிகம் எப்போதும் ஆபத்தானது என்று தனிவணிகர் நினைக்கிறார். **"அவருக்கு உண்மையிலேயே எது தெரியாது என்பது அவருக்குத் தெரியும்"** என்று வில்லியம் பேசட் கூறுகிறார்.

**தனிநபர் கட்டுப்பாட்டின் குறைகள்:**

**1.அளவான முதல்:**

**2.அளவான மேலாண்மைத் திறன்:**

**3.வரையறாப் பொறுப்பு:**

**4.பேரளவு தொழில் செய்ய இயலாமை**

**5.இடர்பாடுள்ள முடிவுகள**

**6.நிலையற்ற தன்மை**

**முடிவு:**

தனி ஒரு மனிதரால் வியாபார நடவடிக்கை அனைத்தையும் திறமையாக மேற்பார்வை செய்ய இயலும் என்றால் தனி நபர்க் கட்டுப்பாடே சிறந்தது

**7. கூட்டாண்மையின் சிறப்புக் கூறுகளை விவரி?**

**கூட்டாண்மையின் சிறப்புக் கூறுகள்:**

**1. உடன்பாடு:**

கூட்டாளிகளிடையே ஏற்படும் உடன்பாட்டின் காரணமாக கூட்டாண்மை உருவாகிறது. இந்த உடன்பாடு எழுத்து வடிவிலோ அல்லது பேச்சளவிலோ இருக்கலாம்.

**2. பல நபர்கள்:**

| | | |
|---|---|---|
| **குறைந்த பட்ச நபர்களின் எண்ணிக்கை** | - | 2 நபர்கள் |
| **அதிக பட்ச நபர்களின் எண்ணிக்கை** | | |
| **வங்கித் தொழில்..................................** | - | 10 நபர்கள் |
| **வங்கி அல்லாத பிற தொழில்கள்** | - | 20 நபர்கள் |

**3. ஒப்பந்த உறவு:**

ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்களிடையே ஏற்படும் ஒப்பந்தத்தின் காரணமாக கூட்டாண்மை ஏற்படுத்தப்படுகிறது. உறவு முறை, அன்பு, பிரியம்,காரணமாக கூட்டாண்மை உருவாகுவதில்லை.

**4. சட்டத்திற்குட்பட்ட தொழில்:**

கூட்டாண்மை என்பது ஒரு தொழிலை நடத்துவதற்காக அமைக்கப்பட்டதாகும். தொழில் என்பது எந்த ஒரு வியாபாரத்தையும், பணியையும், அலுவலையும் குறிக்கும். இந்த தொழில் ஒரு நாட்டின் சட்டத்திற்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

**5. இலாபப் பங்கு:**

கூட்டாண்மையில் இலாபநட்டத்தை ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள விகிதத்தின்படி கூட்டாளிகள் பகிர்ந்து கொள்கின்றனர்.

ஒப்பந்தத்தில் இலாப நட்ட பகிர்வு பற்றி எதுவும் குறிப்பிடாத போது இலாபநட்டம் சமமாக பகிர்ந்து கொள்ளப்படும்.

**6. முகமை உறவு:**

கூட்டாண்மையில் கூட்டாளிகளுக்கிடையே முதல்வர், முகவர் உறவுமுறை நிலவுகிறது. ஒவ்வொரு கூட்டாளியும் உரிமையாளராகவும், அதே சமயத்தில் முகவராகவும் செயல்படுகிறார்.

அனைத்துக் கூட்டாளிகளும் இணைந்தோ அல்லது அனைவரின் சார்பாக ஒருவரோ தொழிலை ஏற்று நடத்தலாம் என்ற முகமைக் கோட்பாட்டின் படி கூட்டாண்மை செயல்படுகிறது.

**7. வரையறாப் பொறுப்பு:**

கூட்டாண்மையில் ஒவ்வொரு கூட்டாளியின் பொறுப்பு, வரையறா கூட்டு மற்றும் தனிப் பொறுப்பு ஆகும். கூட்டாண்மைக் கடனைத் திருப்பிச் செலுத்த கூட்டாண்மைச் சொத்துக்கள் போதுமானதாக இல்லாவிட்டால் கூட்டாளிகள் தங்கள் சொந்த சொத்திலிருந்து கடனை அடைக்க வேண்டும்.

**8. கூட்டு மற்றும் தனிப் பொறுப்பு:**

கடனீந்தோர் தங்களுக்குச் சேர வேண்டிய கடன் தொகையை அனைத்துக் கூட்டாளிகளின் தனிச் சொத்திலிருந்து பெற்றுக்கொள்வது கூட்டுப் பொறுப்பாகும்.

கடனீந்தோர் தங்களுக்குச் சேர வேண்டிய கடன் தொகையை ஏதாவது ஒரு கூட்டாளியின் தனி சொத்தின் மீது வழக்குத்தொடுத்துப் பெற்றுக்கொள்வது தனிப்பொறுப்பாகும்.

**9. தனியாள் தன்மை இன்மை:**

கூட்டாண்மை நிறுனத்தையும், கூட்டாளிகளையும் சட்டம் ஒன்றாகவே கருதுகிறது. கூட்டாண்மையில் உரிமையும், மேலாண்மையும் இணைந்து இருப்பதால் இவ்வணிகத்தில் தனியாள் தன்மை இல்லை.

**10. உட்கிடை ஆணையுரிமை:**

அவசரக் காலங்களில் கூட்டாண்மையின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு சில நடவடிக்கைகளை மேற்கொள்ள கூட்டாளிகளுக்கு வழங்கப்படும் உரிமை உட்கிடை ஆணையுரிமை ஆகும். ஒரு கூட்டாளி மேற்கொள்ளும் நடவடிக்கையானது அக்கூட்டாண்மையையும், கூட்டாளிகளையும் கட்டுப்படுத்தும்.

**8. கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகளைவிவரி?**

கூட்டாண்மை நிறுவனம் பின்வரும் சூழ்நிலைகளில் கலைக்கப்படுகிறது. அவை,

**1. கூட்டாளிகளின் உடன்பாட்டால் கலைப்பு (பிரிவு 40)**

ஒரு கூட்டாண்மை நிறுவனம் உடன்பாட்டால் உருவாக்கப்படுகிறது, அதன் படியே கலைக்கவும் படடலாம். அனைத்து கூட்டாளிகளுக்குள் ஏற்படும் உடன்பாட்டால் கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படலாம்.

**2. கட்டாயக் கலைப்பு (பிரிவு 41)**

அனைத்துக் கூட்டாளியும் நொடிப்பு நிலை அடைந்துவிட்டாலும் செய்து வரும் தொழில் சட்டத்திற்குப் புறம்பானதாக இருந்தாலும், நிறுவனம் கட்டாயமாக கலைக்கப்படும்.

**எடுத்துகாட்டாக** மது விலக்கு சட்டம் இயற்றப்படுதல், மற்றொரு நாட்டுடன் போர் ஏற்படுதல்.

**3. சில நிகழ்ச்சிகள் நிகழ்வுறுவதால் கலைப்பு (பிரிவு 42)**

கீழ்காணும் நிகழ்ச்சி நிகழ்வதால் ஒரு நிறுவனம் கலைக்கப்படலாம்.

1. ஒரு கூட்டாளி இறந்துவிட்டால்,
2. குறிப்பிட்ட காலக் கூட்டாண்மையாக இருந்தால் அக்காலம் முடிவடைந்தவுடன்,
3. குறிப்பிட்ட தொழில் கூட்டாண்மையாக இருந்தால் அத்தொழில் முடிவடைந்தவுடன்,
4. ஒரு கூட்டாளி நொடிப்பு நிலை அடைந்து விட்டதாக நீதி மன்றத்தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பின், ...கூட்டாண்மை கலைக்கப்படும்.

**4. விருப்பமுறிக் கூட்டாண்மை அறிவிக்கையால் கலைப்பு (பிரிவு 43)**

விருப்ப முறிக் கூட்டாண்மையில், கூட்டாளி ஒருவர் நிறுவனத்தைக் கலைக்கும்படி பிற கூட்டாளிகளுக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுத்தால் நிறுவனம் கலைக்கப்பட வேண்டும்.

**5. நீதிமன்றத்தால் கலைப்பு : (பிரிவு 44)**

நீதி மன்றத்தில் கூட்டாளி ஒருவர் கீழ்காணும் காரணங்களுக்காக வழக்கு தொடர்ந்து நிறுவனத்தை கலைக்கலாம்.

**1. கூட்டாளியின் மனநிலை பாதிப்பு:**

கூட்டாளிகளில் எவரேனும் ஒருவர் மனநிலை பாதிப்படைந்து விட்டால் நீதிமன்றம் கலைப்பிற்கான ஆணையை பிறப்பிக்கலாம்.

**2. நிலையான திறமையின்மை:**

கூட்டாளி ஒருவர் திறமையாக தொழில் செய்யும் நிலையை இழந்திருந்தால் நீதிமன்றம் கலைப்பதற்கான ஆணையை பிறப்பிக்கும்.

**3. உடன்பாட்டை தொடர்ந்து மீறுகை:**

கூட்டாண்மையின் உடன்பாட்டை ஒரு கூட்டாளி தொடர்ந்து மீறிக் கொண்டிருந்தால் அவருடன் கூட்டாண்மைத் தொழில் செய்ய இயலாதென ஏனைய கூட்டாளிகள் கருதி அவர்களுள் எவரேனும் ஒருவர் கூட்டாண்மையை கலைக்கக் கோரி நீதிமன்றத்தை அணுகலாம்.

**4. கூட்டாளி ஒருவரின் ஒழுக்கக் கேடு:**

கூட்டாளிகளுள் ஒருவர், ஒழுக்கக் கேடான குற்றத்தை செய்திருப்பின் ஏனைய கூட்டாளிகளிள் ஒருவர் கூட்டாண்மையை கலைக்கக் கோரி வழக்குத் தொடுக்கலாம்.

**5. உரிமை மாற்றம்:**

கூட்டாளி ஒருவர், தொழிலில் தனக்குரிய உரிமை முழுவதையும், பிற கூட்டாளிகளின் அனுமதியின்றி மற்றவருக்கு மாற்றிக் கொடுத்து விட்டால் ஏனைய கூட்டாளிகள் கூட்டாண்மையை கலைக்கக் கோரி நீதி மன்றத்தை அணுகலாம்.

**6. நீதி நேர்மை அடிப்படையில்:**

நிறுவனத்தைக் கலைத்திடப் போதிய அடிப்படைக் காரணமுள்ளது என்று நீதி மன்றம் கருதினால், கூட்டாண்மை கலைக்கப்படலாம்.

**எ.கா:** A,B என்பவர்கள் ஒரு கூட்டாண்மையின் இரு கூட்டாளிகள். அவர்கள் ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொள்வதில்லை எனில் நீதிமன்றம் நிறுவனத்தை கலைத்திட ஆணையிடலாம்.

**9. பங்குகளுக்கும் கடனீட்டுப் பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடுகளை விவரி?**

| வ. | வேறுபாட்டு | பங்குகள் | கடனீட்டுப் |
|---|---|---|---|

| எண் | அடிப்படை | (பங்குநர்கள்) | பத்திரம் |
|---|---|---|---|
| 1. | பொருள் | ஒரு நிறும பங்கு முதலின் ஒரு சிறு கூறு பங்காகும் | கடனை உறுதிப்படுத்தும் சான்று கடனீட்டுப் பத்திரமாகும். |
| 2. | இலாபத்தை வழங்குதல் | போதுமான இலாபம் ஈட்டினால் மட்டுமே பங்காதாயம் வழங்கப்படும் | இலாப நட்டத்தை கருதாமல் கடனீட்டு பத்திரத்தின் மீது வட்டி வழங்கப்படுகிறது. |
| 3. | உறவு | நிறுமத்தின் உரிமையாளார் | நிறுமத்தின் கடனாளார் |
| 4 | இலாபத்தின் அளவு | முன்னுரிமைப் பங்குகளுக்கு நிலையான விகிதத்திலும்,நேர்மைப் பங்குகளுக்கு இலாபத்திற்கேற்பவும் பங்காதாயம் வழங்கப்படுகிறது. | இலாபத்தின் அளவையொட்டி வட்டிவீதம் மாறாது. வட்டி நிலையானது ஆகும் |
| 5. | இயக்குநர் ஒப்புதல் | இலாபம் ஈட்டியிருந்தாலும் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் இயக்குநரவைத் தீர்மானம் மூலமே பங்காதாயம் வழங்கப்படும். | வட்டி செலத்துவதற்கு எவருடைய ஒப்புதலும் வேண்டிய தில்லை. |
| 6. | இலாபப் பகிர்வு | பங்காதாயம் - இலாபப் பகிர்வாகும் | வட்டி - இலாபத்தின் மீதான செலவாகும். |
| 7 | பொறுப்பு | பங்குநரின் பொறுப்பு தான் வைத்துள்ள பங்கு மீது செலுத்தப் பெறாதிருக்கும் தொகையளவே இருக்கும். | பொறுப்பு ஏதும் இல்லை. |
| 8. | வட்டத்தில் வெளியிடுதல் | நிறுமச் சட்டத்தில் உள்ள சில நிபந்தனைக்கு உட்பட்டு பங்குகளை வட்டத்தில் வெளியிடலாம். | கடனீட்டுப்பத்திரங்களை வட்டத்தில் வெளியிட நிபந்தனைகள் ஏதும் இல்லை. |
| 9. | சொத்துக்கள் மீது பிணையம் | நிறுமச் சொத்துக்கள் மீது பங்குநர் களுக்கு பிணையம் ஏதும் இல்லை. | கடனீட்டுப் பத்திரங்கள் சொத்துக் களைப் பிணையமாகப் பெற்றிருக்கும். |
| 10 | பங்குத் தொகை திருப்பித்தரல் | மீள்தகு முன்னுரிமைப் பங்குகளைத் தவிர பிற பங்குகளை நிறுமம் மீட்காது. | குறிப்பிட்ட நாளில் (அ) நிறுமம் விரும்பும் போது கடனீட்டுப் பத்திரங்களை மீட்டுக் கொள்ளும். |

**10.கூட்டுறவு அமைப்பின் முக்கியச் சிறப்பியல்புகளை சுருக்கமாக வரைக?**

1. **தன்னிச்சையாகச் சேரும் சங்கம்:**

பலர் தன்னிச்சையாகச் சேர்ந்து உருவாக்கும் அமைப்பே கூட்டுறவுச் சங்கமாகும். இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேருமாறு ஒருவரை கட்டாயப்படுத்த முடியாது. ஒரு நபர் எப்போது வேண்டுமானாலும் இச்சங்கத்தில் சேரலாம், அது போலவே விலகிக்கொள்ளலாம்

2. **சமத்துவம்:**

கூட்டுறவுச் சங்கத்தில் எல்லா உறுப்பினர்களும் சரி சமம். எல்லா உறுப்பினர்களுக்கும் சம உரிமை உண்டு. ஒருவர் அதிக முதலீடு செய்யும் பொழுது அவருக்கு அதிக உரிமை கிடையாது.

3. **மக்களாட்சி முறையில் மேலாண்மை:**

கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்கள் எவ்வளவு பங்குகள் வைத்திருந்தாலும் ஒரு நபருக்கு ஒரு வாக்கு என்ற மக்களாட்சித் தத்துவத்தின அடிப்படையில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவரிடம் மேலாண்மையை ஒப்படைக்கப்படுகிறது.

4. **வளங்களின் இணைப்பு:**

இந்த அமைப்பில் எல்லா உறுப்பினர்களின் சொந்த வளங்களும் ஒருக்கிணைக்கப்பட்டு அதை எல்லா உறுப்பினர்களின் நலனுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

5. **ஒருமுனைப்படுத்திய முயற்சி:**

ஒவ்வொருவரும் அனைவருக்காக, அனைவரும் ஒவ்வொருவருக்காக என்ற கோட்பாட்டின் படி எல்லாத் தனி நபர்களும் ஒன்றிணைந்து பணியாற்றுகின்றனர்.

6. **சேவையின் தத்துவம்:**

கூட்டுறவு அமைப்பின் முதன்மை நோக்கம் சேவை புரிவதாகும். இலாபம் ஈட்டுவது இரண்டாவது நோக்கமாகும். உறுப்பினர்களுக்குத் தேவையான கடன் வசதி அளித்தல், வீடு கட்டுவதற்கு கடன் வழங்கல், விதைகள், உரங்கள் அளித்தல் போன்ற பல சேவைகள் இந்தச் சங்கங்களால் வழங்கப்படுகின்றன.

7. **பலர் உறுப்பினராதல்:**

பலர் நபர் ஒன்றிணைந்து உருவாக்கும் சங்கம் கூட்டுறவுச் சங்கமாகும். கூட்டுறவை உருவாக்க குறைந்த பட்சமாக 25 நபரும், அதிக பட்சமாக எத்தனை பேர் வேண்டுமானாலும் உறுப்பினராகச் சேரலாம்.

8. **சட்டத்தகுதி:**

கூட்டுறவில் உறுப்பினர்கள் ஒப்பந்தம் செய்துகொள்ள சட்டத் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும். சங்கத்தின் சட்ட திட்டங்கள், விதிமுறைகள் ஆகியவற்றை ஒப்புக் கொண்டு கட்டுப்பட வேண்டும்.

9. **உறுப்பினராவதற்கான வாய்ப்பு:**

சாதி, சமய பாகுபாடுகள் எதுவுமின்றி பொதுவான பொருளாதார நோக்கமுள்ள ஆண்,பெண் எவரும் இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேரலாம். பெரிய பணக்காரரும், வறிய ஏழையும் அதில் உறுப்பினராகலாம்.

10. **உள்ளூர் உறுப்பினர்கள்:**

பொதுவான பொருளாதாரச் சிக்கல்கள் உள்ள உள்ளூரில் வசிப்பவர்களே கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருப்பதால், அவர்கள் ஒருவரையொருவர் தெரிந்து வைத்திருப்பார்கள்.

**11. கூட்டுப்பங்கு நிறுமத்திற்கும், கூட்டுறவுச் சங்கத்திற்கும் உள்ள வேறுபாடு யாவை?**

| வ. எண் | தலைப்புகள் | கூட்டுப்பங்குநிறுமம் | கூட்டுறவு சங்கங்கள் |
|---|---|---|---|
| 1. | பொருள் | இது இலாப நோக்கோடு, பேரளவுத் தொழில் செய்வதற்காக நடத்தப்படும் அமைப்பாகும் | இது பொருளாதாரத்தில் நலிவடைந்த நபர்கள் சேர்ந்து அமைக்கும் சங்கம். |
| 2. | குறைந்த உறுப்பினர் எண்ணிக்கை | தனி நிறுமத்தை அமைக்க குறைந்தது 2 நபர்களும், பொது நிறுமத்தை அமைக்க குறைந்தது 7 நபர்களும் இருக்க வேண்டும். | கூட்டுறவுச் சங்கத்தை அமைக்க குறைந்த பட்சம் 25 நபர்கள் தேவை. |
| 3. | அதிக அளவு உறுப்பினர்கள் எண்ணிக்கை | தனி நிறுமத்தில் உச்ச அளவாக 50 நபர்களும் (ஊழிய உறுப்பினர் நீங்கலாக) பொது நிறுமத்திற்கு வரையறை ஏதுமில்லை. | அதிக பட்சத்திற்கு வரையறை இல்லை. |
| 4. | உள்ளூர் உறுப்பினர் | பொது நிறுமத்தில் உலகில் எப்பகுதியில் வாழ்பவரும் உறுப்பினராகலாம். | குறிப்பிட்ட பகுதியில் வாழ்பவர்களை மட்டுமே உறுப்பினராக சேர்க்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| 5. | புதிவு | இந்திய நிறுமச் சட்டம் 1956ன் படி ஒரு நிறுமம் பதிவு செய்யப்பட வேண்டும். | இது மாநில அரசு கூட்டுறவுச் சட்டத்தின் படி பதிவு செய்யப்பட வேண்டும். |
| 6. | மேலாண்மை | கூட்டுப் பங்கு நிறுமத்தின் மேலாண்மை, உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநரவையிடம் ஒப்படைக்கப்படுகிறது. | இயகக்குநர் குழுவின் உதவியால் மேலாண்மை நடத்தப்படுகிறது. |
| 7. | நோக்கம் | இலாபம் ஈட்டுவதே இதன் முதன்மை நோக்கமாகும். | உறுப்பினர்களுக்கு சேவை புரிவதே இதன் முதன்மை நோக்கமாகும். |
| 8. | பங்குமுதலீட்டுக்கு உச்ச வரம்பு | நிறுமத்தில் பங்குநர்கள் எவ்வளவு பங்குகள் வேண்டுமானாலும் வாங்கலாம். | இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் குறிப்பிட்ட அளவுக்கு மேல் பங்குகள் வாங்க அனுமதியில்லை. |
| 9. | அரசின் சலுகைகள் | கூட்டுப்பங்கு நிறுமத்திற்கு அரசின் சலுகை கிடைப்பதில்லை. | கூட்டுறவுச் சங்கத்திற்கு அரசின் சலுகைகள் மிகுந்த அளவில் கிடைக்கின்றன. |
| 10. | வாக்குரிமை | ஒரு பங்குக்கு ஒரு வாக்குமுறை கடைப்பிடிக்கப் படுகிறது. | ஒரு நபருக்கு ஒரு வாக்கு என்ற முறை கடைப்பிடிக்கப் படுகிறது. |